விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

17 JUN 2010

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 03 வியாழக்கிழமை (17.06.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 180


ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

RAMCO



இலங்கைக்கு வந்துள்ள ஐ.நா. பிரதிநிதி பொஸ்கோ, ஜனாதிபதியுடன் பேச்சில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

## தமிழ்க் கூட்டமைப்புடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தப்படும்

### யசூசி அகாசி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை விஜயத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் மாத்திரம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக இலங்கை வந்துள்ள யப்பானின் விசேட பிரதிநிதி யசுசி அகாசி தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் வேறு எந்தக் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை என்று தெரிவித்த அவர், கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன். இந் நாள்களில் நாட்டில் இல்லாத காரணத்தினால் அக் (18 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா. செயலருக்கு வழங்கிய வாக்குறுதி

# இலங்கை அரசால் நிறைவேற்றவில்லை

## பிரிட்டன் குற்றச்சாட்டு

(லண்டன்)

இலங்கையில் இறுதி யுத்தத்தின் போது போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டமை தொடர்பாக ஐ.நா. செயலர் பான் கீ மூனுக்கு அளித்த வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று தெற்காசிய விவகாரங்களுக்கான பிரிட்டன் பிரதி அமைச்சர் அலெக்ஸ் தெரிவித்துள்ளார். (18 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுக்குச் சென்ற பொஸ்கோ பொதுமக்களைச் சந்தித்துப் பேச்சு

(முல்லைத்தீவு)

ஐக்கிய நாடுகளின் அரசியல் விவகாரங்களுக்கான செயலர் லியாம் பொஸ்கோ முல்லைத்தீவு சென்று பொதுமக்களையும் அதிகாரிகளையும் சந்தித்துத் திரும்பியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அரசியல் விவகாரங்களுக்கான செயலர் லியாம் பொஸ்கோ நேற்றுப் பிற்பகல் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் செய்து அங்கு நடைபெறுகின்ற மீள்குடியேற்றம் மற்றும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை நேரடியாகப் பார்வையிட்டுள்ளார்.

முல்லைத்தீவு அரச செயலகத்தில் அரச அதிபர் திருமதி எமில்டா சுகுமாரைச் சந்தித்து இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள், (18 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. பிரதிநிதி பொஸ்கோ ஜனாதிபதியுடன் பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கு இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்திருக்கும் ஐ.நா. அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான தலைமை அதிகாரி லியாம் பொஸ்கோ, நேற்று மாலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து உரையாடியுள்ளார்.

இருவரும் இலங்கைப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, தமிழ் அகதிகளின் மீள்குடியேற்றம், நாட்டின் மனித உரிமைகள் நிலை ஆகியன குறித்தும் பரஸ்பரம் உரையாற்றியுள்ளார்கள்.

அரசு தரப்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, ஜனாதி (18 ஆம் பக்கம் பார்க்க)


## தடுப்பு முகாம்களிலுள்ள இளைஞர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்

### ஜே.வி.பி. கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் உடனடியாக விசாரணை மேற்கொள்ள வேண்டும். இலங்கையின் சட்டத்திற்கு அமைவாக விசாரணை மேற்கொண்டு குற்ற மற்றவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்திற்கு (18 ஆம் பக்கம் பார்க்க)



## இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் நிகழ்வுக்கு ஒரு இலட்சம் மாணவர்கள்

### கல்வி அதிகாரிகளுக்குப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

இளைஞர்களுக்கான நாளை அமைப்பு யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்துள்ள நிகழ்வு ஒன்றுக்கு சுமார் ஒரு இலட்சம் மாணவர்களைத் திரட்டுமாறு கல்வி அதிகாரிகளுக்கு உயர் மட்டத்திலிருந்து அறிவித்தல் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இளைஞர்களுக்கான நாளை அமைப்பு ஏற்பாடு செய்துள்ள நிகழ்வொன்று இன்று மாலை 4 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு (18 ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியேற்ற அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற்றத்துறை அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவும் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனும் இன்று யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயவுள்ளனர்.

அத்துடன் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடனான சந்திப்பு ஒன்றிலும் அவர்கள் ஈடுபடவுள்ளனர்.

ஏற்கனவே இவர்கள் இருவரும் கிழக்கில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை பிரதேசங்களுக்குச் சென்று மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்றிரவு யாழ்ப்பாணத்துக்கு வந்த அமை (18 ஆம் பக்கம் பார்க்க)

நாளை (18.06.2010) சுழிபுரம் – பறாளாய்

ஈசுர விநாயகரின் தேர்த் திருவிழா


'எளியாரை வலியார் கேட்டால் வலியாரைத் தெய்வம் கேட்கும்'

நேரம்: ந.ப. 12.00 மணியளவில்

சோழியூரான் - பிறைசூடிக்குரு

(1710)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபராக ஞானகாந்தன் பதவி யேற்கும் நிகழ்வில், புதிய அதிபர் அழைத்துச் செல்லப்படுவதையும், அதிபர் பதவியை பொறுப்பேற்றுக் கொள்வதையும் ஆசிரியர்களையும் மேலுள்ளபடங்களிலும், புதிய அதிபர், பிரதி அதிபர் மற்றும் பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் மேடையில் அமர்ந்திருப்பதையும், மாணவர்களில் ஒரு தொகுதியினரையும் மற்றையபடங்களில்காணலாம்.(படங்கள்:என்.குமார்)

# பல்கலைக்கழக மாணவர்கள் 400பேர் பொலிஸாரால் கைது

கொழும்பில் உள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு எதிரில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பேராதனை பல்கலைக்கழகத்தின் இணை மருத்துவப் பீடத்தின் 400 மாணவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தமது பாடநெறிக்கான கற்கை வருடங்களை 4 ஆண்டுகள் என்ற போதிலும் அதனை மூன்று வருடங்களாக குறைத்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்த மாணவர்கள் நேற்று இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

நேற்று காலை கைது செய்யப்பட்ட மாணவர்கள் கடவான பகுதிக்கு கொண்டு செல்லப் பட்டனர். இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் உந்துல் பிரேமரத்ன தமது உரிமைகளுக்கான போராட்டம் நடத்த மாணவர்களுக்கு உள்ள ஜனநாயக உரிமைகளையும் அரசாங்கம் பறித்துள்ளதாக கூறியுள்ளார். (ச-5)

# தனிப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு

(கிளிநொச்சி)

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு இதுவரை தோற்றாமலும் இம்முறை பரீட்சைக்கு விண்ணப்பித்து மாகாணத்தில் பதிவு செய்யாத காரணத்தால் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ள 21 வயதுக்கு உட்பட்ட தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தங்களை மாகாணத்தில் பதிவுசெய்து பதிவு இலக்கம் வழங்குவதற்காக பதிவுக்கட்டணம் 575 ரூபாயுடன் நிராகரிக்கப்பட்ட கடிதத்துடனும் இன்று கிளிநொச்சிவலயக்கல்வி அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவு செய்யத்தவறும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்ற முடியாதிருக்கும் என கிளிநொச்சி கல்விவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.முருகவேள் அறிவித்துள்ளார். (ச)

# போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

அரசசேவையில் அலுவலக பணியாளர்களாக உள்ளோரை பொதுமுகாமைத்துவ உதவியாளர் சேவையில் தெரிவு செய்வதற்கான வரையறுக்கப்பட்ட போட்டி பரீட்சைக்கு வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றது.

அவ் வகுப்புக்கள் யாழ். மனோகரா சந்திக்கு அண்மையிலுள்ள நாவலர் மகாவித்தியாலத்தில் கடந்த 12ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு பிரதி சனிக்கிழமைகளில் பிற்பகல் 2 மணிமுதல் 4 மணி வரை நடைபெற்றுவருகின்றது.

இதில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.சத்தியமூர்த்தி விரிவுரை யாற்றிவருகிறார். பரீட்சைக்கு விண்ணப்பித்தோர் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-6,4)

# யுத்த வெற்றி பூர்த்தி விழா நாளை கொண்டாட ஏற்பாடு

(கொழும்பு)

யுத்த வெற்றியின் ஒரு வருட பூர்த்தி விழா நாளை வெள்ளிக்கிழமை காலி முகத்திடலில் கொண்டாடப்படவுள்ள நிலையில் கொழும்பில் விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த போக்குவரத்து ஏற்பாடுகள் நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணி முதல் விழா நிறைவடையும் வரையில் நடைமுறைப் படுத்தப்படும் என்று பொலிஸார் கூறினர்.

இந் நிலையில் கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்கள் தும்முள்ளை சுற்றுவட்டத்தின் ஊடாக வந்து தேர்ஸ்டன் வீதி, கேம்பிரிஜ் பிளேஸினூடாகத் திரும்பி ஹோர்டன் பிளேஸ் சுற்றுவட்டம் மற்றும் சி.டபிள்யூ. டபிள்யூ.கன்னங்கர மாவத்தை, மருதானையூடாக கொழும்புக்குள் பிரவேசிக்க முடியும்.

இதேவேளை கொழும்பு நகரிலிருந்து வெளிச்செல்லும் வாகனங்கள் சீனோர் சந்தி, டெக்னிக்கல் சந்தியினூடாக வலது புறம் திரும்பி மருதானை பாலத்தினூடாக காமினி சுற்றுவட்டம் டார்லி வீதி, இப்பன்வெல சந்தி, லிப்டன் சுற்றுவட்டம், தர்மபால மாவத்தை, எஃப்.ஆர்.சேனாநாயக்க மாவத்தை, சி.டபிள்யூ. டபிள்யூ.கன்னங்கர மாவத்தையினூடாக இடது புறம் திரும்பி நந்தா மோர்டர்ஸ் சந்தி வரை பயணித்து வலது புறம் திரும்பி சினமன் கார்டன் சுற்றுவட்டம் ரீட்டாவத்தை தும்முல்லைச் சந்தி பம்பலப்பிட்டியூடாக புள்ளெர்ஸ் வீதிக்கு பயணிக்க முடியும்.

இதேவேளை குறித்த வெற்றி விழா தினத்தன்று கொழும்பின் சில வீதிகள் அதிகாலை 5மணிமுதல்விழாநிறைவடையும்வரையில்மூடப் படும் என்றும் பொலிஸார் கூறினர். (ச-5)

# அடையாள அட்டைகள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

பல்வேறு பகுதிகளிலிருந்தும் மீட்கப்பட்ட அடையாள அட்டைகள் வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ள முடியும்.

கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகளின் விபரம் வருமாறு,

ஆறுமுகம் இராஜேஸ்வரி(மறவன்புலோ), தவமணி நமசிவாயம் (145,புதிய செம்மணி வீதி,நல்லூர் )தவமணி கந்தையா (புதிய செம்மணி வீதி , நல்லூர்) தியாகராசா கௌரியம்மா (பரந்தன் வீதி, பூநகரி),சக்திவேல் யோகேஸ்வரி (727563504V) (ச-9)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு அதிபர் பதவி வெற்றிடமாகின்றது. இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பதவிக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம்.

மாதிரி விண்ணப்ப படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை 28.06.2010 ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

# குடும்பப் பாடசாலை அதிபர்களுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்குட்பட்ட குடும்பப் பாடசாலைகளின் தலைமை அதிபர்களை இன்று காலை 9.00 மணிக்கு யாழ். வலயக்கல்வி அலுவலகத்தில் ஒன்றுகூடுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச)

# புதிய பாடசாலை ஆரம்பிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியின் ஆரம்பப்பிரிவானது இசுறு பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்திற்கமைவாக வேறுபடுத்தப் பட்ட புதிய பாடசாலையாக யாழ். புத்தூர் இந்து ஆரம்பப்பாடசாலை என்ற புதிய பெயருடன் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப் பாடசாலையின் புதிய அதிபராக இ.கோகிலராகவன் நியமிக்கப்பட்டுள்ளதுடன் இந்நிகழ்வில் வலயக்கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்வி பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-6,4)

# மென்பந்து போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 55-வது ஆண்டு விழாவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக் கழகம் நடத்தும் மென் பந்துச் சுற்றுப்போட்டிக்கு தென்மராட்சி அணிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

கலந்துகொள்ளவிரும்பும் கழகங்கள் விண்ணப்பப் படிவத்தை கைதடிச் சந்தியில் உள்ள செல்வா தையலகத்தில் பெற்று எதிர் வரும் முதலாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)


## உடன் தேவை

யாழ்.நகரில் வீடியோ,ஸ்ரூடியோ ஒன்றுக்கு Photoshop, Video Editing வேலை தெரிந்தவர்கள் அல்லது பழக ஆர்வம் உள்ளவர்கள் இருபாலாரும் நேரில் வரவும். (சி-437)

309,நாவலர்வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2190

## சேவை நலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்துக்களும்



38 வருட வங்கிச் சேவையைப் பூர்த்தி செய்து மக்கள் வங்கியில் இருந்து இன்று ஓய்வுபெறும் திரு.சுவாம்பிள்ளை ஹென்றி அவர்கள் எமது சமூகத்திற்கும் மக்கள்வங்கிக்கும் செய்த சேவைகளை நன்றியுடன் நினைவு கூரும் இச்சந்தர்ப்பத்தில், எம் இனிய பிறந்த நாள் வாழ்த்துக்களையும் கூறுவதுடன், அவரதும், குடும்பத்தவரதும் எதிர்கால சுபீட்சமான வாழ்விற்கும் மனதார வாழ்த்துக் கூறுகின்றோம்.

உதவிப்பொது முகாமையாளர்,
பிராந்திய முகாமையாளர்,
சக உத்தியோகத்தர்கள்.

(1706)

மக்கள் வங்கி
பிராந்திய தலைமையகம்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## வேலை ஆட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும்தொலைபேசிநிலையத்திற்கு போட்டோ பிரதி, தொலை பேசி இயக்குவதில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் ஆண், பெண் இருபாலாரும் தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்.

(1708) 0789488160,0774012707

## கொனிக்கா கலர் லாப்பிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை

1. கணக்குப் பதிவாளர்கள் (ஆண்,பெண்)
2. கிராபிக்ஸ் டிசைனர்ஸ் (ஆண்,பெண்)
3. மேற்பார்வையாளர் (ஆண்)
4. கலர்லாப், ஸ்ரூடியோ (பயிலுனர்கள்)

இல. 14, ஸ்ரீவெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3493

(C-1712)

# இன்று ஒரு தகவல்

## இடதுகைப் பெருவிரல்

"இதோ இருக்கிறாரே இவர் தான் என்னுடைய வலதுகை" என்று சிலபேர் அறிமுகப்படுத்துவது உண்டு. அப்படியானால் என்ன அர்த்தம்?

அவர் மிகவும் நெருக்கமானவர். நம்பிக்கைக்குரியவர் என்று அர்த்தம். அவரில்லாமல் நான் இல்லையென்று அர்த்தம்.

நம்பிக்கைக்கு உரியவர் என்பதை சொல்வதற்கு 'வலதுகை'யை ஒப்பிடுவது வழக்கம்.

ஆனால்... நம்பிக்கைக்கு உரியது வலதுகையா? இடதுகையா? என்று ஒரு கேள்வி கேட்டால், 'இடதுகை' என்று தான் சிலபேர் சொல்கிறார்கள். ஏன் தெரியுமா?

பத்திரமெல்லாம் எழுதி பதிவு செய்கிறோம் அல்லவா, அதில் இடதுகைப் பெருவிரல் ரேகையைத்தான் பதிவு செய்கிறோம்.

அதனால் இடதுகை தான் நம்பிக்கைக்குரியது என்று அவர்கள் சொல்கிறார்கள்.

இப்படிச் சொல்பவர்கள் யார் என்று நினைக்கிறீர்கள் ? விரல் ரேகைப் பதிவு கூடத்தில் வேலை செய்பவர்கள்தான்.

அவர்களை சந்திப்பதற்கு 4 நாட்களுக்கு முன்னர், என்னுடைய நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன். அந்த நண்பர் ஒருமாதிரியான ஆள். என்ன கேட்டாலும் எனக்குத் தெரியவில்லை என்று சொல்லவேமாட்டார்.

எல்லாவற்றுக்கும் ஏதாவது ஒரு பதிலை சொல்லிவிடுவார்.

அவரிடம் அன்றைக்குக் கேட்டேன்.

"ஏன்சேர்? முக்கியமான பத்திரங்களிலெல்லாம் இடதுகைப் பெருவிரல் ரேகையைப் பதிவு செய்கிறோமல்லவா, அது ஏன்? என்று கேட்டேன்.

"வலதுகை சாப்பிடுகிற கை. அதில் மை தடவினால் கழுவுவதற்குக் கஷ்டமாயிருக்கும். அதனால் தான் இடதுகை விரலை உபயோகப் படுத்துகிறோம்." என்றார். சரி, இதற்குமேல் இவரிடம் பேச வேண்டாம் என்று விட்டுவிட்டேன். அதன்பின் விரல் ரேகை பதிவுக் கூடத்தில் வேலைபார்க்கும் சிலரைச் சந்தித்து விபரம் கேட்டேன். அவர்கள் தான் சரியான தகவலைச் சொன்னார்கள்.

முதலில் நாம் எதற்காக பெருவிரல் ரேகையை மட்டும் பயன்படுத்துகின்றோம்? மற்றைய நான்கு விரல்களிலும் ரேகையே இல்லையா?

இருக்கிறது. இருந்தாலும் அதிகமாக இல்லை.

மற்றைய விரல்களைக் காட்டிலும் பெருவிரலில் தான் அதிக ரேகைக் கோடுகள் இருக்கிறது. இப்படி அதிகமாக இருப்பதனால் அது நிபுணர்கள் நுணுக்கமாக ஆராய்வதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

அதனால் தான் பெருவிரலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

சரி, மற்றைய விரல்களைவிட பெருவிரல் மிகவும் வசதியாக இருக்கிறது சரி...

அதற்கு வலதுகைப் பெருவிரலை பயன்படுத்தினால் என்ன? எதற்கு இடதுகைப் பெருவிரலை உபயோகப்படுத்துகிறார்கள்?

இதற்கும் ஒரு காரணமுண்டு.

நாம் சாதாரணமாக நாளாந்த வேலைகளுக்கு வலது கையை உபயோகப்படுத்துவதனால் அந்தக் கையிலுள்ள விரல் ரேகைகள் தேய்மானம் அடைவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம். அதனால் ரேகைக் கோடுகள் தெளிவில்லாமல் போகலாம். ஆனால் இடது கையை நாம் அதிகமாக உபயோகப் படுத்தாத காரணத்தால் இடதுகைப் பெருவிரல் ரேகையின் கோடுகள் தெளிவாக கிடைப்பதற்கு வாய்ப்புக்கள் அதிகம்.

அதுமட்டுமல்ல.. அடிக்கடி உபயோகப்படுத்துவதனால், விபத்தில் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பும்வலது கைக்கு அதிகம்.

இடதுகை கைப்பெருவிரல் ரேகைக்கு முக்கியத்துவம் கொடுப்பது இதனால் தான்.

ஒரு ஆள் வந்தான். அவனுக்கு இடதுகையில் கட்டைவிரல் இல்லை. என்னப்பா ஆச்சு? என்று விசாரித்தார் ஒரு பெரியவர்.

ஒரு மெஷினில் தவறுதலாக கையை விட்டுவிட்டேன் என்றான்.

"நல்ல வேளை! வலதுகை கட்டைவிரல் போயிருந்தால் சாப்பிடவே முடியாமல் போயிருக்கும்" என்றார் பெரியவர்.

"ஆமாம் சேர்! முதலில் வலதுகைதான் மெஷினில் மாட்டிக் கொள்ள இருந்தது.

நீங்கள் சொன்ன மாதிரி நானும் யோசித்துப் பார்த்து விட்டுத்தான் புத்திசாலித்தனமாக டக்கென்று வலதுகையை இழுத்துவிட்டு இடது கையைக் கொடுத்துவிட்டேன் " என்றான் அந்த ஆள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

### மாகாண மட்ட கூடைப்பந்தாட்ட போட்டி

# பெண்கள் பிரிவில் திருக்குடும்ப கன்னியர் மடம் சம்பியன்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண மட்டப் பாடசாலைக் கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. நேற்று முன்தினம் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மற்றும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகிய மைதானங்களில் நடைபெற்றது.

பெண்களுக்கான போட்டிகளில் முதலில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டிகளில் யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் 54:06 என்ற புள்ளி அடிப்படையில் மன்னார் சென். சேவியர் கல்லூரியையும் உடுவில் மகளிர் கல்லூரி 45:14 என்ற புள்ளி அடிப்படையில் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியையும் வென்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தன.

இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும், திருக்குடும்பக் கன்னியர் மடமும் விறுவிறுப்பாக விளையாடின. முதல் பாதி கால் பாதி ஆட்டம் 15:13 என்ற புள்ளி அடிப்படையில் முடிவுற்றது.

இரண்டாவது கால் பாதி ஆட்டத்தில் திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆதிக்கம் செலுத்தி 29:22 என்று ஆட்டத்தை தன் பக்கம் மாற்றியது. மூன்றாவது பாதி ஆட்டத்திலும் சிறப்பாக ஆடிய திருக்குடும்பக் கன்னியர்மடம் 45:35 என மூன்றாவது கால் பாதி ஆட்டத்தினை முடித்தது.

இருந்தும் நான்காவது கால் பாதி ஆட்டத்தின் கடைசி நிமிடங்கள் யார் வெற்றி பெறுவார்கள் என்று கூறமுடியாத அளவிற்கு போட்டி விறுவிறுப்பாக அமைந்தது. இருந்தும் உடுவில் மகளிர் கல்லூரி தமக்கு கிடைத்த அருமையான சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்த தவறினர்.

இதனைச் சரியாகப் பயன்படுத்திய திருக்குடும்பக் கன்னியர்மடம் 65:55 என்ற புள்ளி அடிப்படையில் ஆட்டத்தினை முழுமையாக தன் வசமாக்கி மாகாணச் சம்பியன் ஆகியது.

மூன்றாவது இடத்திற்கான ஆட்டத்தில் மன்னார் சென்.சேவியர் கல்லூரியை எதிர்த்து இராமநாதன் மகளிர் கல்லூரி மோதியது. தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய இராமநாதன் மகளிர் கல்லூரியின் ஆட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் மன்னார் சென்.சேவியர் 11:78 என்ற புள்ளி அடிப்படையில் தோல்வி கண்டது. (6-5)

## வறிய குடும்பங்களுக்கு மலசலகூட வசதி

(கொழும்பு)

அங்கவீனமான நிலையிலுள்ள வறிய குடும்பங்களுக்கு அல்லது பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட வறிய குடும்பங்களுக்கு மலசல கூட வசதியை ஏற்படுத்தும் திட்டமொன்றை வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

தலா ஒரு இலட்சம் ரூபா மாகாண விசேட நிதித்திட்டத்தின் கீழ் இதற்கென வழங்கப்படவுள்ளது.

இந்நிதியானது 3 கட்டங்களாக பயனாளிகளுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)



DFCC வங்கி , DFCC வர்தன வங்கிகளின் யாழ்ப்பாண கிளையின் சனிக்கிழமை வங்கிச்சேவை அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வங்கியின் நிறைவேற்று உபதலைவர் ஆரியரட்ண மங்கள விளக்கேற்றுவதனையும் அருகில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வர்த்தக தொழிற்துறை மன்றத் தலைவர் பூரணச்சந்திரன் மற்றும் முகாமையாளர் வே.ஞானோதரன், கடன் உத்தியோகத்தர் பதுமன், பிராந்திய முகாமையாளர் குசுமுசிறி சற்குமார, செயற்பாட்டு தலைவர் அஜிந்த ஹேவநாயக்க ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

*17-06-2010*
*(ஆனி 03 , வியாழக்கிழமை)*
*பஞ்சமி காலை 7.08 மணிவரை*
*சஷ்டி பின்னிரவு 4.41 மணிவரை*
*மகம் பின்னிரவு 2.43 மணிவரை*
*இராகுகாலம்.1.23-2.53 மணிவரை*
*சுபநேரம் . 7.23-8.53 மணிவரை*
*நல்லூர் பண்டாரக்குளம் மருத வாழைப்பிள்ளையார் கொடி , உடுவில் சிவஞானப்பிள்ளையார் கொடி, கைதடி கயிற்றசிட்டி கந்தசுவாமி கொடி, விசுவமடு தொட்டியடி சித்தி விநாயகர் கொடி, கோப்பாய் வெள்ளெடுவைப் பிள்ளையார் கொடி, சிறுப்பிட்டி செல்லப்பிள்ளையார் கொடி, இணுவில் கந்தசுவாமி கொடி, அச்சுவேலி காட்டுமலைக்கந்தன் கொடி, சஷ்டி விரதம், அமிர்தசித்தம்.*

| | |
|---|---|
| மேடம் | செய்தொழில் விருத்தி, மனச்சஞ்சலம், குடும்பக் கவலை, முயற்சி தாமதம். |
| இடபம் | ரோக நிலை, புதிய தகவல், பயந்த சுபாவம், நண்பர்கள் சந்திப்பு. |
| மிதுனம் | புதிய பொருள் சேர்க்கை, கூட்டு முயற்சி, பயணம், ஜனவசியம். |
| கடகம் | கடின வார்த்தை, தனவிரயம், தொழில் சிந்தை, சயன சுகக் குறைவு. |
| சிங்கம் | ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி, உற்சாகம்,போசன சுகம். |
| கன்னி | தொழில் மந்த நிலை, சுபசெலவு, உறவினர் சந்திப்பு, அதிகாரம். |
| துலாம் | ஆரோக்கியமான நிலை, முயற்சி கைகூடும், நல்ல வரவேற்பு, தனவருவாய். |
| விருச்சிகம் | சுபநிகழ்வு, பிறர்உதவி, முயற்சி கைகூடும், விருந்துபசாரம். |
| தனுசு | வாகன சுகம், பித்தரோகம், கட்டுப்பாடு, பிரயாண நன்மை. |
| மகரம் | உடல் நலக் குறைவு, வீண் தொல்லை, முயற்சி தாமதம், தனவிரயம். |
| கும்பம் | களஸ்திர நன்மை, நல்ல வரவேற்பு, முயற்சி கைகூடும், போசன நன்மை. |
| மீனம் | திடீர் பயணம், தொழில் நன்மை, காரிய சித்தி, விருந்துபசாரம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா |
|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 90 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 180 | 170 |
| தக்காளி | 200 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 |
| கோவா | 80 | 90 |
| கரட் | 200 | 240 |
| பூசணி | 40 | 40 |
| புடோல் | 70 | 60 |
| வாழைக்காய் | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 |
| பாகற்காய் | 140 | 130 |
| வெண்டிக்காய் | 70 | 80 |
| கரணைக் கிழங்கு | 60 | 70 |
| பயிற்றங்காய் | 140 | 160 |
| லீக்ஸ் | 150 | 160 |
| பீற்றூட் | 100 | 100 |
| கறிமிளகாய் | 160 | 140 |
| முருங்கைக்காய் | 350 | 400 |
| போஞ்சி | 140 | 130 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 |
| கீரை – 1 பிடி | 20 | 30 |
| தேசிக்காய் | 140 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 40 |

# செம்மணி வீதியில் வாகனவிபத்து; வாகனங்களில் பயணித்தோர் அருந்தப்பு





(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்கு முன்பாக உள்ள செம்மணி வீதியில் கார் ஒன்றும் எல்வ் ரக லொறி ஒன்றும் விபத்துக்குள்ளானதில் குறித்த வாகனங்களில் பயணித்தோர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

குறித்த இரு வாகனங்களும் வளைவு ஒன்றில் திரும்பிய வேளையில் இவ் விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான மேற்படி வாகனங்களில் மொத்தமாக 5 பேர் பயணம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# இணுவில் கந்தசாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 26ஆம்திகதி சனிக்கிழமை பகல் பக்தி முக்தி திருவிழாவும் இரவு வேல்திருவிழாவும், 28 ஆம்திகதி இரவு 8 மணிக்கு மஞ்சத் திருவிழாவும், ஜூலை மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மாம்பழத் திருவிழாவும் 4ஆம் திகதி ஞாயிறு இரவு 7 மணிக்கு குதிரை வாகனத் திருவிழாவும் ஒருமுகத்திருவிழாவும் 8 ஆம்திகதி வியாழக்கிழமை கார்த்திகை திருவிழா, கைலாச வாகனத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்த திருவிழாவும் இரவு 7 மணிக்கு கொடியிறக்கமும் திங்கள் 6.30 மணிக்கு திருக்கல்யாணமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும் பிற்பகல் 2மணிக்கு வைரவர் பொங்கலும் நடைபெறவுள்ளது. (4)



## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மேலை வண்ணை நகர் அருள்மிகு ஸ்ரீவிசுவேச விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு சப்பறமும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளது. (6-4)

## சிறப்புச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதிவெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் "தேவி பாகவதம்" என்னும் விடயம் பற்றி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் சொற்பொழிவாற்றவுள்ளார். (4-35)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 மணிபூசை முடிவுற்றதும் "சனாதனதர்மம்-2" என்னும் விடயம் பற்றி ஓய்வுபெற்ற அஞ்சல் பயிற்சிக் கல்லூரி அதிபர் ரி.ஜெ. சண்முகநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார். (4-35)




## வாகனச் சோதனை நடவடிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவின் கீழ் வாகனச் சோதனைகள் இடம்பெற்று வருகிறது.

இரவு பகலாக மோட்டார் வண்டிகள், முச்சக்கரவண்டிகள் போன்றவை பரிசோதிக்கப்பட்டு வருவதுடன் சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் போன்றவை சோதிக்கப்பட்டு வருகிறது.வீதிகளில், சந்திகளில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு சட்டம், ஒழுங்கு போன்றவையும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. (6-10)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி அருள்மிகு அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவன நாதர் சிவன் ஆலய தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதுடன் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. (4-37)

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

வட்டு தெற்கு அருள்மிகு பேச்சி அம்பாள் தேவஸ்தான வருடாந்த பொங்கல் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 25ஆம் திகதி இரவு பொங்கல் பெருவிழாவுடன் இவ்வுற்சவம் நிறைவுபெறும். (6)

## அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வேலையற்ற க.பொ. த. (சா/து) , உயர்தரம் மற்றும் பட்டதாரி இளைஞர்கள், யுவதிகள் செயலக அலுவலகத்திலுள்ள தொழில் வங்கியில் தமது பதிவினை மேற்கொள்ளுமாறும் ஏற்கனவே பதிவினை மேற்கொண்டவர்களும் புதிதாக பதிவினை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் விண்ணப்பப்படிவத்தினை தமது பிரிவு கிராம சேவை அலுவலரிடம் பெற்று பூர்த்தி செய்து பருத்தித்துறை பிரதேச செயலக தொழில் வங்கியில் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(கரவெட்டி)

கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான அணிக்கு 15 ஓவர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உதய கதிர்காமம் யு.கே விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (4-24)

✠✠✠

(கரவெட்டி)

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் பெரு விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு இரு பிரிவுகளாக இரு மைதானங்களில் நடைபெறவுள்ளது.

இதில் A பிரிவுகளுக்கான போட்டி இமையாணன் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்திலும் B பிரிவினர்களுக்கான போட்டி மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்திலும் நடைபெறும் என்று யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ். ரூபசிங்கம் தெரிவித்துள்ளார். (4-24)

# டெங்கு நோய்க்கு இலக்கானோர் இனங் காணப்பட்டுள்ளனர்

(பருத்தித்துறை)

வடமராட்சியில் கொற்றாவத்தை என்ற கிராமத்தில் டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வருவதுடன் இந்த நோய்க்கு இலக்காகி கடந்த வாரம் இரண்டு சிறு பிள்ளைகள் மரணமடைந்துள்ளனர்.மேலும் 16 பேர் இந் நோய்க்கு இலக்காகியிருப்பதாக இனங் காணப்பட்டுள்ளனர்.

இதனை அடுத்து, அப் பகுதி எங்கும் மலேரியா நோய்த் தடுப்புப் பிரிவு, உத்தியோகத்தர்கள், உரிய மருந்துகளை மூன்று நாட்களாக விசிறி வருகின்றனர்.

இதேபோன்று கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பருத்தித்துறைப் பகுதியில் டெங்கு நோய்க்கு பலர் இலக்காகியிருந்ததோடு ஒரு சிலர் இறந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சகலரும் தமது வீடுகளில் நுளம்பு தங்குவதற்கு இடமளிக்காது உரிய முறைகளைப்பேணி, நுளம்பு உற்பத்திகளை இல்லாதொழிக்க நடவடிக்கைகளை தீவிரமாக ஒடுக்குமாறு மலேரியாத் தடுப்புப் பிரிவினர் அவசர கோரிக்கைகளை விடுக்கின்றனர். (6-3-10)



வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவினரால் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் அண்மையில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் வல்வெட்டித்துறை மக்கள் வங்கியால் உடுப்பிட்டி மத்தி மாதர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் 20 பேருக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் கடனாக வழங்கப்பட்ட நிகழ்வில் யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.ஹரிச்சந்திரபண்டார பயனாளி ஒருவருக்கு கடன் வழங்குவதையும் அருகில் வல்வெட்டித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.டி.அத்துல அமரசிங்க, வல்வெட்டித்துறை மக்கள்வங்கி முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன், பிரதி முகாமையாளர் எஸ்.சர்வானந்தன், கடன்பகுதி உத்தியோகத்தர் மீரா அஜந்தன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு

(துனங்கிளப்பு)

நீர்வேலி வலிகிழக்கு வாழைக்குலை உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக சி.சுந்தரலிங்கம் செயலாளராக சி.திருநாவுக்கரசு ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும் நிர்வாக சபை உறுப்பினர்களாக 15 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-37)

✠✠✠

(துனங்கிளப்பு)

மறவன்புலோ கிராம அபிவிருத்தி சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவுக் குழு கூட்டம் தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் இடம் பெற்றது.

இதில் தலைவராக க.குவானந்தனும் செயலாளராக வி.ஆனந்ரஞ்சனும் பொருளாளராக கந்தையாவும் உபசெயலாளராக சி.திருஞானசம்பந்தர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (6-37)

## அங்குரார்ப்பண நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவுப் பாடசாலையின் அங்குரார்ப்பண நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை புதிய அமைவிடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (4)

# யாழ். கோட்டையின் மறுசீரமைப்பு பணிகளை ஆரம்பிக்க தீர்மானம்

(கொழும்பு)

யாழ்ப்பாண நகரில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க கோட்டையின் மறு சீரமைப்பு மற்றும் கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்க தொல்பொருள் ஆய்வில் துறை தீர்மானித்துள்ளதாக தேசிய கலாசார மற்றும் புராதன விவகாரங்களுக்கான அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து மேற்படி அமைச்சால் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குறித்த பணிகள் இரு கட்டங்களாக மேற்கொள்ளப்படவுள்ளதுடன் இதன் முதற்கட்டமாக 104 மில்லியன் ரூபா செலவில் தொல்பொருள் ஆய்வியல் துறை அலுவலகமொன்று யாழ்ப்பாண நகரில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான பணியாளர் ஒருவரையும் இத்துறை நியமித்துள்ளது.

யாழ். கோட்டையின் மறுசீரமைப்புப் பணிகள் 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் நிறைவடையும் என்று எதிர்பார்ப்பதாகவும் தேசிய கலாசார அமைச்சு அறிவித்துள்ளது.

வரலாற்று சிறப்பு மிக்க யாழ்ப்பாண கோட்டையானது 1618 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர்கள் இலங்கை மீது படையெடுத்து யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய போது சிறியதாக கட்டப்பட்டதாகும். பின்னர் அது 1658ஆம் ஆண்டு டச்சுக்காரர்களின் ஆதிக்கத்தில் விரிவுபடுத்தப்பட்டது. அதன் பின்னர் 1795ஆம் ஆண்டு பிரித்தானியாவின் கட்டுப்பாட்டில் வந்தது.

இந்நிலையில் 1986 இல் அங்கிருந்த இராணுவத்தினரை விரட்டியடித்த தமிழீழ விடுதலைப்புலிகள் அதனைக் கைப்பற்றினர். இருப்பினும் 1996ஆம் ஆண்டு மீண்டும் அப் பிரதேசத்தைக் கைப்பற்றிய இராணுவத்தினர் மேற்படி கோட்டையும் தம்வசமாக்கிக்கொண்டனர்.

இந்த கோட்டையின் சுவர்கள் பழுது பார்க்கும் நிலையில் இருந்த போதிலும் கோட்டையினுள் உள்ளமிக பழமை வாய்ந்த டச்சு தேவாலயம் திருத்த முடியாத நிலையில் காணப்படுவதாக தொல்பொருள் துறை இயக்குனர் செனரத் திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்த பணிகளுக்காக 400 மில்லியன் ரூபாவை நெதர்லாந்து அரசு வழங்க இருப்பதாகவும் தெரியவருகின்றது. (6)

# டெங்கு ஒழிப்புக்கு கியூபா பக்ரீரியா

(கொழும்பு)

டெங்கு ஒழிப்புக்கான பி.ரி.ஐ. பக்ரீரியாவை முன் கட்டணமின்றி இலங்கைக்கு வழங்கக் கியூபா அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கைக்கான கியூபாத் தூதுவர் நிர்சியா கெஸ்த்ரோ கெவாராவுடன் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து கியூபா இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

விரைவில் பி.ரி.ஐ. பக்ரீரியா இலங்கைக்கு கொண்டுவரப்படும் எனச் சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படவுள்ள பி.ரீ.ஐ பக்ரீயாவின் பெறுமதியில் 50 வீதத்தை முன்கட்டணமாகச் செலுத்தினால் மாத்திரமே அதனை இலங்கைக்கு வழங்குவதாகக் கியூபா அரசாங்கம் ஏற்கனவே கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி சம்பியன்



(யாழ்ப்பாணம்)

வட மாகாண மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. நேற்று முன்தினம் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மற்றும் யாழ்ப்பாண மத்திய கல்லூரி ஆகியவற்றின் கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்றது.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெற்ற ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை எதிர்த்து சென் .ஜோன்ஸ் கல்லூரி மோதியது.

வழக்கம் போல ஆரம்பம் முதல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆதிக்கம் செலுத்தியது. முதல் கால் பாதி ஆட்டம் 23:09 என்ற புள்ளி அடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வசமானது.

இரண்டாவது கால் பாதி ஆட்டத்தில் சற்றுச் சிறப்பாக ஆடிய சென்ஜோன்ஸ் கல்லூரி, முன்னிலை பெறவிட்டாலும் 19:29 என்ற புள்ளி அடிப்படையில் ஆட்டத்தில் நெருக்கம் காட்டியது.

அதே ஆட்டத்தினை மூன்றாவது கால் பாதி ஆட்டத்திலும் வெளிப்படுத்திய சென். ஜோன்ஸ் கல்லூரி போட்டியினை விறுவிறுப்பாக மாற்றியது. மூன்றாவது பாதி ஆட்டம் 47:38 என்ற புள்ளி அடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முன்னிலையில் முடிவுற்றது.

நான்காவது கால் பாதி ஆட்டத்தில் தனது தனித்துவமான ஆட்டத்தினை வெளிப்படுத்திய யாழ்ப்பாண மத்திய கல்லூரி ஆட்டத்தினை 76:48 என்ற புள்ளி அடிப்படையில் கைப்பற்றி வடமாகாணச் சம்பியன் ஆகியது.

மூன்றாவது இடத்திற்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியை எதிர்த்து வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் மோதியது.

இப்போட்டியில் 55:44 என்ற புள்ளி அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வெற்றி பெற்றது. (6-5)

# 17.06.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 1579 - சேர் பிரான்சிஸ் டிறேக் நோவா அல்பியன் (கலிபோர்னியா) என்ற நாட்டை இங்கிலாந்துக்காக உரிமை கோரினார்.
- 1631 - முகலாய மன்னன் ஷாஜகானின் மனைவி மும்தாஜ் மஹால் தனது 14 ஆவது மகப்பேறின் போது காலமானாள்.
- 1839 - ஹவாய் பேரரசில் கத்தோலிக்கர் தமது சமயத்தை வழிபடுவதற்கு அனுமதிக்கப்பட்டது.
- 1911 - செங்கோட்டை வாஞ்சிநாதன் திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் துரையை சுட்டுக்கொன்று தன்னையும் சுட்டு சாவடைந்தான்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பாரிசை ஜெர்மனி கைப்பற்றியதை அடுத்து நட்பு நாடுகளின் படைகள் பிரான்சை விட்டு விலகத் தொடங்கின.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: லங்காஸ்ட்ரியா என்ற ஐக்கிய இராச்சியக் கப்பல் பிரான்சில் மூழ்கடிக்கப்பட்டதில் 4000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1940 -இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியப் படைகள் லிபியாவில் கப்பூசோ துறைமுகத்தை இத்தாலியார்களிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1940 - எஸ்தோனியா லாத்வியா மற்றும் லித்துவேனியா ஆகிய பால்ட்டிக் நாடுகளை சோவியத் ஒன்றியம் கைப்பற்றியது.
- 1944 - ஐஸ்லாந்து டென்மார்க்கிடம் இருந்து விடுதலை அடைந்து குடியரசாகியது.
- 1944 - பிரெஞ்சுப் படைகள் எல்ப தீவை ஜெர்மனியிடம் இருந்து விடுவித்தனர்.
- 1954 - குவாத்தமாலாவல் இராணுவப்புரட்சி இடம்பெற்றது.
- 1948 - பென்சில்வேனியாவில் அமெரிக்க விமானம் கார்மெல் மலையில் மோதியதில் 43 பேர் கொல்லப்பட்டனர்.
- 1953 - பெர்லினில் கிழக்கு ஜெர்மனி அரசுத்கெதிராக இடம்பெற்ற ஆர்ப்பாட்டம்.சோவியத் படைகளினால் நசுக்கப்பட்டதில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.
- 1987 - மாலைநேர கடல் குருவியினத்தின் கடைசிக் குருவி இறந்ததில் அவ்வினம் முற்றாக அழிந்தது.

## பிறப்புகள்.

- 1703 - ஜோன் வெஸ்லி மெதடிஸ்தத்தை ஆரம்பித்தவர் (இ.1791)
- 1942 - மொகம்மது எல்பரதேய் பன்னாட்டு அணுசக்தி அமைப்பின் தலைமை இயக்குனர் நோபல் பரிசு பெற்றவர்
- 1973 - லியாண்டர் பயஸ் இந்திய டென்னிஸ் வீரர்
- 1980 - வீனஸ் வில்லியம்ஸ் அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை

## இறப்புகள்

- 1858 - ராணி லட்சுமிபாய் (ஜான்சிராணி) இந்திய விடுதலைப் போராட்ட வீராங்கனை
- 1911 - வாஞ்சிநாதன் இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1886)
- 2001 - டொனால்ட் கிராம் நோபல் பரிசு பெற்றவர் (பி.1919)

## சிறப்பு நாள்

ஐஸ்லாந்து - தேசிய நாள் (1944)

**1885 - விடுதலைச் சிலை நியூயோர்க் துறைமுகத்தை வந்தடைந்தது. சுதந்திர தேவி சிலை ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஒரு புகழ்பெற்ற சிலையாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இச் சிலையை பிரான்ஸ் நாடு அமெரிக்காவிற்கு அன்பளிப்பாக வழங்கியது**



# புகலிடம் தேடிச் சென்ற இலங்கையர்கள் தமது அனுபவங்களை விபரிக்கின்றனர்

கடந்த ஒக்டோபர் மாதம் இந்தோனேஷிய மீன்பிடி படகு மூலம் அவுஸ்திரேலியா நோக்கி இலங்கைத் தமிழர்களின் சிலர் தங்கள் அனுபவங்களை விபரித்துள்ளனர்.

அவுஸ்திரேலியா நோக்கிச் சென்ற 78 இலங்கையர்களில் சேகரானந்தம் நிசாந்தும் ஒருவர் ஆவர். தமிழரான அவர் இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு அரசியல் புகலிடம் தேடிச் சென்றார். ஆனால் போகும் வழியில் கப்பல் மூழ்கத் தொடங்கியதாக அவர் தெரிவித்தார்.

இது குறித்து கூறிய மற்றொரு இலங்கையரான சிவபாலசுந்தரம் ராஜ்மோகன் (வயது 25) என்பவர் நாங்கள் சாகப்போகின்றோம் என்று நினைத்தோம். பின் அவுஸ்திரேலியாவில் அவசரப்பிரிவிற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எங்களை காப்பாற்றுமாறு கேட்டோம்.

கப்பலுக்குள் தண்ணீர் அதிகளவிற்கு உட்புகத்தொடங்கி விட்டது. தண்ணீர் வந்த துவாரத்தை அடைக்க முயன்றோம். இருதடவை அந்த துவாரத்தை மூடினோாம். அவுஸ்திரேலியா உதவி அளித்தது. ஓசனிக் வைக்கிங் என்ற அவுஸ்திரேலியாவின் சுங்க ரோந்துக் கப்பல் வந்து காப்பாற்றியது.

ஆயினும் அந்த சுங்கக் கப்பலில் இருந்து இலங்கையர்கள் இறங்க மறுத்தனர். தனது கரைக்கு அவுஸ்திரேலியா தங்களைக் கொண்டு செல்ல வேண்டும் என்ற உறுதி மொழியைத் தர வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர். சிலர் இந்துசமூத்திரத்திற்குள் பாய்ந்து சாகப்போவதாக அச்சுறுத்தினர். தங்களுக்கு புகலிடம் வழங்கப்படாவிடில் தாங்கள் சமூத்திரத்திற்குள் குதிக்கப்போவதாக அச்சுறுத்தினர்.

இதற்கான பெறுபேறு கிடைக்க பல வாரங்கள் எடுத்தன. இந்த விடயங்கள் தொடர்பாக அவுஸ்திரேலியாவுக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையில் சர்ச்சை மூண்டது. இந்தக் குடியேற்ற வாசிகளை தமது பாதுகாப்பில் வைத்திருக்க இரு நாடுகளும் விரும்பவில்லை. இதனால் ஸ்தம்பித நிலை ஏற்பட்டது.

இந்த விவகாரம் அவுஸ்திரேலிய பிரதமர் கெவின்ரூட்டின் செல்வாக்கைப் பாதித்தது. பாராளுமன்றத்தில் இந்த விடயம் குறித்து சொற்போர் மூண்டது. இந்த சர்ச்சை தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் சேகர் ஆனந்த நிசாந்தும் சிவபாலசுந்தரம் ராஜ்மோகனும் இந்த பழையவற்றைத் திரும்பிப்பார்க்கவில்லை. இவை யாவும் கடந்த 8 மாதங்களில் இடம்பெற்ற சம்ப வங்களாகும்.

அவர்கள் இப்போது அமெரிக்காவில் உள்ளனர். இப்போது சேகரனந்தம் நிசாந்துக்கு பெரிய ஆறுதல் கிடைத்துள்ளது. அவரும் அவருடைய நண்பர்களும் ஒக்லாந்திற்கு




கடந்த மாதம் வந்துள்ளனர். 27 வயதுடைய இந்த இலங்கை அகதி இப்போது நகரத்தில் சுதந்திரத்தை அனுபவிக்கின்றார். கடைகளில் தனக்குத்தேவையானவற்றை வாங்கிக் கொள் கிறார். வேலை தேடுகின்றார்.

நாங்கள் எங்கும் எந்த இடத்திற்கும் எந்த நேரத்திலும் போக முடியும். பிரச்சினை இல்லை என்று அவர் கூறியதாக கொன்ரா கோஸ்ரா ரைம்ஸ் பத்திரிகை நேற்று முன் தினம் தெரிவித்துள்ளது.

இலங்கை அகதிகள் தொடர்பாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்திருப்பதாவது,

எனக்கு வேலை தேவை நான் படிக்க விரும்புகிறேன். ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ள விரும்புகின்றேன் என்று சேகரனந்தம் நிசாந் கூறியுள்ளார்.

அவரும் ஏனைய ஐந்து இலங்கை அகதிகளும் திருமணமாகாதவர்கள் சுமார் 20ற்கும் 30இற்கும் இடையிலான வயதுடையவர்கள். மே மாதம் இறுதிப்பகுதியில் அவர்கள் ஒக்லாந்தை வந்தடைந்தனர். அவர்களில் மூவர் ஓசனிக்வைக்கிங் கப்பலில் பல வாரங்களைக் கழித்தவர்கள் மற்றவர்கள் கடந்த வருடம் மற்றொரு படகில் வைத்து இந்தோனேசியக்கடற்படையினரால் மீட்கப்பட்டனர். சர்வதேச மீட்புக்குழுவின் உதவியுடன் அவர்கள் தற்போது ஒக்லாந்தின் ஷான் அன்ரனியோ மாவட்டத்தில் இரு தொடர்மாடிக் குடியிருப்புகளில் குடியமர்த்தப்பட்டனர்.

துரிதமாக நிலைமைக்கு ஏற்புடையதாக தங்களை அவர்கள் மாற்றிக்கொண்டுள்ளனர். அவர்கள் அமெரிக்கா வருவதை ஒரு போதும் நோக்கமாகக் கொண்டிருக்க வில்லை. ஆனால் அவுஸ்திரேலியாவுக்கான அவர்களின் பயணம் தோல்வியில் முடிவடைந்ததையடுத்து இப்போது ஒக்லாந்திற்கு வந்துள்ளனர்.

அவுஸ்திரேலியா அதிகாரிகள் தங்களை கிறிஸ்மஸ்தீவுக்கு கொண்டுசெல்வார்கள் அவர்கள் முதலில் நினைத்தனர். ஓசனிக் வைக்கிங்கில் ஒரு மாத காலம் இருந்த பின் இந்தோனேஷிய துறைமுகமான தஞ்சுங் பினாங்கில் உள்ள தடுப்பு நிலையத்தில் அவர்கள் வைக்கப்பட்டனர். அங்கு வைத்து அகதிகளுக்கான ஐ.நா.உயர்ஸ்தானிகராலயம் அவர்களுக்கான இடத்தைத் தேடியது. அமெரிக்கா 28 அகதிகளை ஏற்றுக்கொண்டது. தங்கள் நாட்டில் அவர்களுக்கு நிரந்தர வதிவிட அனுமதியை வழங்கியுள்ளது.

ஏனையோர்கள் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா மற்றும் ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டனர். வட அமெரிக்காவிற்கு அனுப்பப்படவிருந்தோர் ருமேனியாவிலுள்ள அகதி முகாமில் பல வாரங்களைக் கழித்தனர். இவர்களை எங்கு கொண்டு செல்வது என இறுதித்தீர்மானம் எடுப்பதாக சர்வதேச அமைப்புகள் ருமேனிய அகதி முகாமை இடைத்தங்கல் முகமாக வைத்திருந்தனர்.

ஷான்பிரான்ஸிஸ்கோவை கூகுளில் நாங்கள் தேடினோம். இது அழகான இடம். என நாங்கள் நினைத்தோம் என்று சிவபாலசுந்தரம் ராஜ்மோகன் கூறினார். இங்கேயே நிரந்தரமாக தங்கிவிட நாம் விரும்புகிறோம். எங்களுக்கு இலங்கையை பிடிக்கவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

2009 மே இல் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்தது. அரசாங்கம் யுத்தம் முடிவடைந்துவிட்டதாகக் கூறுகிறது. ஆனால் தமிழ் மக்கள் சுதந்திரத்தைப் பெற்றிருக்கவில்லை என்று அவர் கூறினார்.

ஒக்லாந்தில் உள்ள 6 நண்பர்களில் மூவர் அவர்களின் சிறு பராயத்தில் வன்முறைகளில் தந்தை மாரை இழந்திருந்தனர். ஒருவருக்கு 5 வருடங்களுக்கு முன்னர் சகோதரன் காணாமல் போய்விட்டான். சேகரானந்தம் நிசாந் 6 வயதாக இருக்கும் போது அவர்களின் குடும்பத்தின் பலசரக்குக்கடையில் தகப்பன் சுட்டுக்கொல்லப்பட்டதை அவர் நேரில் கண்டுள்ளார். அந்தத் தருணத்தில் தமிழர்கள் பலர் கொல்லப்பட்டனர். எமது நண்பர்கள் பலர் தமது தந்தையர்கள் ,சகோதரர்களை இழந்தனர் என்று அவர் கூறியுள்ளார்.

ஒக்லாந்தின் கிழக்குக்குடாவில் இன்று நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் உள்ளனர். அவர்களில் சிலர் தாங்கள் அகதிகளை வரவேற்பதாகக்கூறுகின்றனர். இலங்கையின் இன மோதலில் அவர்கள் வெவ்வேறு தரப்பினராக இருந்தாலும் அகதிகளை வரவேற்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

அநேகமாக யாவருமே புலம்பெயர்ந்தனர். 1970 தொடக்கம் அவர்கள் புலம்பெயர்ந்து வருகின்றனர். யுத்தமே இதற்குக் காரணம் என்று இல்லை. ஆனால் அதுவே அதிகளவுக்கு இதற்கான பங்களிப்பை வழங்கியது. வாய்ப்புக்களை யுத்தம் மட்டுப்படுத்தியிருந்தது என்று ஒக்லாந்தைச் சேர்ந்த ராஷ்சிலோன் (வயது 29) என்பவர் கூறினார். அவர் இலங்கைப் பெற்றோருக்கு லொஸ் ஏஞ்சல்ஸில் பிறந்தவராவர்.

சிலோனில் உண்மையான பெயர் சஞ்சீவடிசில்வா ஆகும். சிங்களக்குடும்பத் தைச் சேர்ந்த அவர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மீது அனுதாபத்துடன் இருக்கிறார். ஒக்லாந்தில் உள்ள அகதிகளுக்கு தான் உதவ விரும்புவதாக அவர் கூறியுள்ளார். நாங்கள் சமாதானமாக ஒன்றாக வாழ்ந்த இரண்டாயிரம் ஆண்டு வரலாறு உண்டு என்று அவர் கூறியுள்ளார். (4-6)

## பாகிஸ்தானுக்கு இந்தியா எச்சரிக்கை

(புதுடில்லி)

இந்தியாவுக்கு எதிராக பயங்கரவாதிகளை தூண்டி விடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என பாகிஸ்தானுக்கு இந்தியா மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தியா - பாகிஸ்தானுக்கு இடையேயான நம்பிக்கை பற்றாக்குறையை சரி செய்ய இரு நாடுகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தையை பலப்படுத்த முடிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து எதிர்வரும் 25 ஆம் திகதி இந்திய வெளியுறவுத் துறை செயலர் நிருபமா ராவ் பாகிஸ்தான் விஜயம் செய்யவுள்ளார்.

இது குறித்து டில்லியில் பேட்டியளித்த அவர்,

இந்தியாவுக்கு எதிராக பயங்கரவாதிகளை தூண்டி விடுவதை பாகிஸ்தான் நிறுத்திக் கொள்ள வேண்டும். பயங்கரவாதிகளை ஆதரிப்பது இருநாடுகளுக்கும் இடையேயான அமைதி பேச்சுவார்த்தைக்கும் ஒற்றுமைக்கும் இடையூறு ஏற்படுத்தும் என எச்சரித்துள்ளார்.

அடுத்தமாதம் 15 ஆம் திகதி பாக் வெளியுறவுத் துறை அமைச்சர் ஷா முகமது குரேஷியுடன் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கிருஷ்ணா பேச்சுவார்த்தை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-4)




போபால் விஷவாயு சம்பவ வழக்கின் முக்கிய குற்றவாளி வாரன் அண் டர்சன் மற்றும் அவர் பத்திரமாக தப்பிச் செல்ல உதவிய மத்திய பிரதேச முன்னாள் முதல்வர் அர்ஜூன் சிங் ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக் கக் கோரி போபாலில் பாரதிய ஜனதா கட்சியினர் கறுப்புக்கொடி ஏந்தி கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## நித்யானந்தா மீதான வழக்கு விசாரணைக்கு தடைவிதிப்பு

(சென்னை)

நித்யானந்தா சாமியார் மீது புதுச்சேரியில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு சென்னை மேல் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

நடிகை ரஞ்சிதா உடன் நித்தியானந்தா சாமியார் நெருக்கமாக இருப்பது போல் வீடியோ காட்சிகள் ஒளிபரப்பட்டன. இதையடுத்து நித்யானந்தா தலை மறைவானார். பின் அவரை கர்நாடாக பொலிஸார் கைது செய்தனர். சமீபத்தில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார் நித்தியானந்தாவுக்கு எதிராக சென்னை, கோவை, புதுச்சேரி உள்ளிட்ட இடங்களில் சிலர் புகார் கொடுத்தனர்.

சென்னை உயர்நீதிமன்றில் நித்யானந்தா தாக்கல் செய்த மனுவில் புதுச்சேரியைச் சேர்ந்த சட்டத்தரணிகள் எனக்கு எதிராக புகார் கொடுத்துள்ளனர். சன்னியாசி என்ற போர்வையில் பொதுமக்களை நான் ஏமாற்றியதாகவும் பெருமளவு சொத்துக்களை சேர்த்திருப்பதாகவும் இந்துக்களின் மத உணர்வுகளை புண்படுத்தியதாகவும் புகார் கூறப்பட்டுள்ளது. எந்த வித முறையான விசாரணையும் இல்லாமல் எனக்கு எதிராக பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். நான் தவறாக நடந்து கொண்டதாக கூறப்படுவதால் புகார் கொடுத்தவர் எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை. இத்தகைய புகாரை கொடுப்பதற்கு அவருக்கு தகுதி யில்லை இந்த புகாரை பொலிஸார் பதிவு செய்திருக்கக்கூடாது எனக்கு எதிரான புகார் பொய்யானது உள்நோக்கம் கொண் டது. இந்தப் புகார் தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கைக்கு தடை விதிக்க வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டுளள்து.

மனுவை நீதிபதி சி.டி.செல்வம் விசாரித்தார். நித்யானந்தா சார்பில் சட்டத்தரணி ஐ.சுப்ரமணியன் பாலா டெய்சி ஆகியோர் ஆஜராகினர்.

புதுச்சேரியில் பதிவு செய்யப் பட்ட வழக்கு தொடர்பான நடவடிக்கைக்கு நீதிபதி செல்வம் தடை விதித்தார். (6)

# ஆனி மாதப் பலன்கள்

## சிங்கம்

(மகம், பூரம் , உத்தரம் முதலாம் பாதம்)

**விடாமுயற்சியால் வெற்றியை வரவழைத்துக் கொள்ளும் சிங்க இராசி நேயர்களே!**

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது தொடக்க நாளில் விரயாதிபதி விரய ஸ்தானத்திலும் சுகாதிபதி ஜென்ம இராசியிலும் சஞ்சரிப்பதால் ஆரோக்கியத்திற்காக ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலையும் அதிக பிரயாசை எடுத்து ஒருசில காரியங்களை முடிக்கும் அமைப்பும் உருவாகும். அதே நேரத்தில் சூரியன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் வருமானப் பற்றாக்குறை ஏற்படாது.

உங்களுக்கு கவலைகளையும் கடன் சுமைகளையும் கொடுப்பது அஷ்டமத்து குரு வின் ஆதிக்கம் தான். அதுவும் இப்பொழுது வக்ர கதியில் இயங்கப் போவதால் மாதக் கடைசியில் சில மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடைபெறலாம். பிறரின் ஒத்துழைப்போடு நீங்கள் செய்த கூட்டு முயற்சிகளில் இருந்து விலக நேரிடும்.

இருப்பினும் யோக காரகன் செவ்வாய் உங்கள் இராசியில் பலம் பெறும் இந்த மாதத்தில் துணிவோடும் தன்னம்பிக்கையோடும் செயல்பட்டு வெற்றிக்கனியை எட்டிப்பிடிப்பீர்கள்.

ஜூன் 16 ஆம் திகதி மிதுன இராசியில் புதன் சஞ்சரிக்கிறார். இலாப ஸ்தானத்திற்கும் தன ஸ்தானத்திற்கும் அதிபதியாக விளங்கும் புதன் இலாப ஸ்தானத்தில் பலம் பெறும் பொழுது பொருளாதார பற்றாக்குறை அகலும். தொழிலில் வருமானம் இருமடங்காகும். குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறத் தொடங்கும். முக்கிய புள்ளிகளைச் சந்தித்து ஒரு சில காரியங்களுக்கு நல்ல முடிவெடுப்பீர்கள். ஜூலை 2 ஆம் திகதி கடகத்தில் புதன் சஞ்சரிக்கும் பொழுது பயணங்கள் அதிகரிக்கும். ஒரு வேலையை இரு முறை செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகும். மாமன் மைத்துனர் வழியில் மனக்கசப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

ஜூலை12 ஆம் திகதி சிங்க இராசியில் சுக்ரன் சஞ்சரிக்க போகிறார். இக்காலம் ஒரு பொற்காலம் என்றே சொல்ல வேண்டும். 3,10 க்கு அதிபதியான சுக்ரன் இராசியில் சஞ் சரிக்கும் பொழுது வழக்குகளில் வெற்றி கிடைக்கும். கலக்கங்கள் தீரும். கைநிறைய பொருள் குவிக்கும் விதத்தில் தொழில் வளர்ச்சியடையும் நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருந்து கூட்டு முயற்சிக்கு ஒத்துழைப்புச் செய்வர். விவசாயத்திலும் ஒரு சிலர் ஈடுபாடு செலுத்தும் சூழ்நிலை உருவாகும்.

ஜூலை 15 ஆம் திகதி மீன இராசியில் குரு வக்ரம் பெறுகிறார். அஷ்டமாதிபதி அஷ்ட மத்தில் வக்ரம் பெறுவது நன்மை தான். எனவே சில நல்ல மாற்றங்கள் திடீரென வந்து சேரும். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்ச்சியடைவீர்கள். குழந்தைகள் நலன் கருதி எடுக்கும் முயற்சிகளில் அனுகூலம் கிட்டும். பூர்வீக சொத்துக்களால் இலாபம் உண்டு.

இம்மாதம் சிவாய நம என்று சிந்தித்து இருந்தால் அபாயம் உங்களுக்கு இல்லை. எனவே சிவாலயத்திற்குச் சென்று சிவனது நாமத்தை 108 முறை உச்சரித்து வழிபட்டு வாருங்கள்.

## கன்னி

(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள் அத்தம் சித்திரை 1. 2 ஆம் பாதங்கள்)

**நல்ல யோசனைகளை அள்ளி வழங்கும் கன்னி ராசி நேயர்களே!**

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிகிறது.

எனவே. பணப்புழக்கம் அதிகரிக்கும். பக்கு வமா பேசி காரியங்களைச் சாதித்துக் கொள் வீர்கள். இனத்தார் பகை மாறும் இல்லத்தில் ஒவ்வொன்றாக இருந்த தடை மாறும்.

ஜென்மச் சனியின் ஆதிக்கம் வலுவடைவதால் பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் உருவாகும். உத்தியோகம் தொழிலில் உடனிருப்பவர்களால் பகை உருவாகி நீண்ட தூரப் பயணங்களைக் கூட ஒரு சிலர் சந்திக்க நேரிடும் ஜென்மச்சனி விலகும் வரை பொறுமையாகச் செயல்படுவது நல்லது.

மாதத் தொடக்கத்தில் தொழில் ஸ்தானத்தில் சூரியனும் கேதுவும் இணைந்திருப்பது அவ்வளவு நல்லதல்ல. அலைச்சல்களும் அதிகரிகளால் தொல்லைகளும் ஏற்படலாம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்க உடனடியாக வீடு மாற்றம் அல்லது இடமாற்றம் செய்ய ஒரு சிலர் முன்வருவர். எந்த முயற்சி செய்தாலும் சுய ஜாதகத்தின் பலமறிந்து செயல்படுவது நல்லது.

ஜூன் 16 ஆம் திகதி மிதுன ராசியில் புதன் சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக செய்யும் செயல்களில் வேகத்தை கடைப்பிடிப்பீர்கள் எண்ணங்கள் எளிதில் செயலாகவில்லையே என்ற கவலை இனி மாறும். உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும். குழந்தைகளின் கல்வி நலன் கருதி ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். அரசு வழியில் எதிர்பார்த்த சில உதவிகள் கிடைக்கும்.

ஜூலை 2 ஆம் திகதி கடக ராசியில் புதன் சஞ்சரிக்க போகிறார். எனவே மாமன் - மைத்துனர் வழியில் மகிழ்ச்சி தரும் தகவலொன்று வந்து சேரும். இளைய சகோதர வழியில் இருந்த பிரச்சினைகள் அகன்று எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

ஜூலை 12 ஆம் திகதி சிங்க ராசியில் சுக்ரன் சஞ்சரிக்க போகிறார். 2 க்கு அதிபதி பன்னிரெண்டில் சஞ்சரிக்கும் பொழுது விலை உயர்ந்த சொத்துக்கள் விரயமாகலாம். மருத்துவச் செலவுகளும் கூடலாம். எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள். கோபத்தை தவிர்ப்பதன் மூலம் கொடுக்கல்

**சிவல்புரி சிங்காரம்**

வாங்கல்களில் நிறைவு காணலாம்.

அதிசாரமாக வந்த குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிந்து நன்மைகளைக் கொடுக்கும் என்று நீங்கள் நினைக்கிற பொழுது பார்க்கும் குரு இப்பொழுது வக்ரமடைகிறார். எனவே வழிபாட்டின் மூலம் தான் நீங்கள் வளர்ச்சியை கூட்டிக் கொள்ள இயலும். குழந்தைகள் வழியில் பிரச்சினைகள் உருவாகலாம். பெண் வழி பிரச்சினைகளும் அதிகரிக்கும். இழப்புகளை நீங்கள் சந்திக்காமல் இருக்க சுய ஜாதகப்படி தசாபுத்திக்கேற்ற விதத்தில் பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது.

அஷ்டலட்சுமி கவசத்தை வெள்ளிக் கிழமை தோறும் படித்து வழிபட்டு வருவதோடு எட்டு வகை லட்சுமியின் படத்தையும் இல்லத்து பூஜை அறையில் வைத்து சுகந்த வாசமுள்ள மாலையினை சூட்டி வழிபடுவது நன்மை தரும். (வளரும்)

# புலிகளின் சிரேஷ்ட தலைவர்கள் மலேசியாவில் தங்கியுள்ளனர்

## மலேசிய பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

மலேசியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பின் சிரேஷ்ட தலைவர்கள் பலர் தங்கியிருப்பது தொடர்பில் தாம் கண்டு பிடித்திருப்பதாக மலேசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் தங்குமிடம் மற்றும் போக்குவரத்து வசதி கருதி மலேசியாவில் தங்கியிருப்பதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனை உறுதிப்படுத்தியுள்ள மலேசிய உள்விகார அமைச்சர் ஹிஷாமுடின் ஹுஸைன் இஸ்லாமிய மற்றும் ஏனைய போராளிக் குழுக்கள் தமது வன்முறைச் சம்பவங்களுக்கான நடவடிக்கைகளை மேற் கொள்வதற்காக மலேசிய நாட்டை பயன்படுத்துவதாக கூறியுள்ளார்.

அத்துடன் தகவல் பரிமாற்றம் ஆட்களை இணைத்தல் நிதி விவகாரம் ஆகியவற்றுக்கும் இவர்கள் தென்கிழக்கு ஆசியாவைப் பயன்படுத்தி வருவதாகவும் மலேசிய உள் விவகார அமைச்சர் தெரிவித்தார்.

இஸ்லாமிய மற்றும் ஏனைய போராளிக் குழுக்களின் ஆட்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையில் மாணவர்களே இலக்கு வைக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-4)

# கிழக்குப் பல்லைக்கழகத்தில் மருத்துவபீடம் அமைக்கப்படும்

## உயர் கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சகல வசதிகளும் கொண்ட மருத்துவபீடம் அமைக்கப்படும் என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க உறுதியளித்துள்ளார்.

மட்டக்களப்பிற்கு நேற்று முன்தினம் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்ட அமைச்சர் நகரிலுள்ள சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்திற்கு விஜயம் செய்து தேவைகளை கேட்டறிந்து கொண்டார்.

அமைச்சருடன் மீள்குடியேற்ற அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மீள் குடியேற்ற அமைச்சின் இணைப்பதிகாரி பொ.ரவீந்திரன் உட்பட பல அதிகாரிகள் வருகை தந்திருந்தனர்.

இங்கு விஜயம் செய்த உயர் கல்வி அமைச்சர் இப்பீடத்தின் மாணவர்களையும் பீடாதிபதி ஈ.கருணாகரன் மற்றும் விரிவுரையாளர்களையும் சந்தித்துப் பேசினார்.

இதன் போது இப் பீடத்தின் தேவைகளை மாணவர்களும் விரிவுரையாளர்களும் இணைந்து முன்வைத்தனர்.

இவற்றைக் கேட்டறிந்து கொண்ட உயர் கல்வி அமைச்சர் திஸாநாயக்க கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கென வசதிகளும் கொண்ட மருத்துவப் பீடம் ஒன்று அமைக்கப்படும் என்று தெரிவித்தார். (6-4)





யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்ற டெங்கு ஒழிப்பு சிரமதானப்பணியில் மாணவர்கள் ஈடுபடுவதையும் யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், கல்லூரி அதிபர் வீ.கணேசராசா மற்றும் ஆசிரியர் ஆகியோர் மேற்பார்வை செய்வதையும் படங்களில் காணலாம்.

# நவீன எண் ஜோதிடம்

13

இதனால் 9ஐத் தரும் எண்களைக் கொண்டவர்கள் அனைவரும் ஏறக்குறைய அமெரிக்க அதிபர்களான ஆபிரகாம் லிங்கனில் இருந்து கெனடியில் இருந்து காந்தி ஊடாக நெல்சன் மண்டேலா வரைக்கும் உள்ள தேச, நேசத்துக் காதலர்களையும் ரசியாவின் ஸ்ரானிலினில் இருந்து ஜேர்மன் கிட்லர், இத்தாலி முசோலின், சதாம் உசேன் வரையிலான வீறுகொண்ட சர்வாதிகார அக்கிரமசாலிகளையும் 9 என்ற எண் தோற்றுவித்துள்ளது. அது செவ்வாயின் அக்கிரமச் செயல்கள் ஆகும். இன்னும் பல ஆசிய நாட்டிலும் சில மேற்சொன்னவர்கள் போன்று அக்கிரம ஆட்சிக்குள் உட்பட்டவர்களும் உண்டு.

செவ்வாய்க்கிரகம் அன்றைய ரோம் சாம்ராஜ்யத்தின் ஆதிக்க காலத்தில் செவ்வாய் கிரகத்தினை சண்டைக்குரிய தெய்வமாகவும் சண்டைத் தளபதியாகவும் சண்டைக்கு வெற்றி தந்தது. மீட்டு வெற்றி கொள்ளும் தெய்வமாக ரோம் நாட்டவர்கள் தங்கள் காலத்தில் வழிபட்டதாக கதைகளும் உண்டு. அதை வணங்கினால் தைரியமும் அரச சபையில் பேசும் அற்றலும் தோள் வலிமையும் போர் வெற்றியும் கிடைக்கும் என்பது இன்றைய மக்களின் நம்பிக்கையும் கூட. செவ்வாய்க்கிரகம் பல கிரகங்களில் இருந்தும் ஆதிகால கிரக தோற்றத்தின் போது அவை சுற்றுப் பாதையில் சுற்றும் போது செருக்குண்டு மீறி வெடித்துச் சிதறிய பல கிரகங்களின் கூட்டு அணியே செவ்வாய்க்கிரகம் என்று கணித்து வைத்துள்ளனர். 9 கிரகங்களின் சக்தியையும் அது அடக்கி ஆளும் தன்மை கொண்டது. திருமண காலத்து ஜாதகப் பார்வையில் உதயத்துச் செவ்வாய், ஏழுச் செவ்வாய், எட்டுச் செவ்வாய் 12 செவ்வாய் என்று ஜாதகருக்கு நின்றுவிட்டால் திருமணம் ஸ்தம்பித்துவிடும் என்பது ஜாதக ஆச்சாரிகளின் கணிப்பின் படைப்பாகும். இன்றும் அதை மதிக்கின்றனர். செவ்வாய் சகல வல்லமை கொண்ட சுய அதிகாரம் கொண்ட ஒரு இராணுவ உடையில் எதிரியைத் தாக்கும் பாவனையில் தயாராக நிற்கும் ஒரு மனித வடிவின் உருவமே செவ்வாயின் தனித் தோற்றமாக எண்ஜோதிடம் மட்டும் அல்ல ஜாதகங்கள் கூட கணித்து வைத்திருக்கின்றது. அதனால் செவ்வாயைக் குறிக்கும். 9,19,27 அல்லது பிறப்பு மாத ஆண்டு திகதியில் மூன்று தடவைக்கு மேல் ஒன்பது சேர்ந்தாலும் (உதாரணம் 9.9.1989) அவர்களின் போக்கும் மன அழுத்தங்களும் ஒரு போர் வீரராகவே அந்த 9 அவர்களை ஆக்கிவைக்கும் சக்திதனை செவ்வாய் எண் மூலமாக கொண்டுள்ளது.

9 என்ற எண் செவ்வாயைக் குறிக்கும் என்ற அழுத்த நம்பிக்கைக்கும் அவர்களின் செயல்களின் காட்சிகள் சாட்சியாக காட்டி நிற்பதும், இலங்கையில் இறுதியில் ஜனாதிபதித் தேர்தலுக்கு தோற்றியவர்கள் இருவருமே 18 ஆம் திகதியில் தோன்றியவர்கள் என்பது செவ்வாய்க்கு சாட்சியாகும்.

இராகு என்ற கிரகம் செவ்வாய் உடன் ஒத்து இயங்கும் தன்மை கொண்டது. இராகு என்ற கிரகம் எண்ணிக்கை கொண்ட எண் வரிசையில் 4 இனை தன் சாரதியாக கொண்டுள்ளது. இதுவாக்கு, பேச்சு, திறமை, சாதிப்பு, சாதுரியம் இவைகளை தனது ஆட்சியின் கருவியாக அசையும், அசைவற்றதோடு அல்லாது மனிதர்களுக்குள்ளும் திணித்துவிடுகின்றது. வளர்பிறைக் காலத்து ஒரு வகையாகவும், தேய்பிறைக் காலத்து எதிர்மாறையாகவும் வாழ்த்தியும் தாழ்த்தியும் தன் ஆட்சியை செய்துகொள்கின்றது. 4, 13, 22, 31 என்ற எண்கள் ஒரு மாதத்துள் வரும்போது இதுவே அந்த நாட்களின் தளபதியாக நிற்கின்றது. 4 என்ற எண் எதிர் விரோதமான எண்களுடன் சேரும்போது ஒரு நாட்டில் அந்தப் பெயரிற்கு ஒப்ப தனது ஆட்சிதனை அக்கிரம வழியிலோ, அதிகார வழியிலோ நியாயப்படுத்த அது பின்வாங்குவதில்லை. இதன் ஒரு தனி விஷேடம். சில வாக்கு சாதுரிய மனிதர்களை தன்பால் ஈர்த்து சாதனை புரிந்து இறுதியில் அவர்களின் வாழ்க்கையை பாதியில் முடித்தும் விடுக்கின்றது. இராகு ஏனைய கிரகங்களிற்கு எதிர்த்தாற் போல் பூமியை வலம் வரும் இரண்டாவது கிரகமாகும். அதனால் எந்தக் கிரகங்களையும் எதிர்க்க அன்றி அவைக்கு தலைபணிந்து மண்டியிடும் தன்மை அந்த 4 ஆகிய எண்ணிற்கு கிடையாது.

அதேபோன்றுதான் 4இல்,4,13,22,31 அல்லது ஆண்டில் நான்கு 1930 இல் இருந்து 9 ஐக் கூட்டிவரும் ஒவ்வொரு ஆண்டின் கூட்டுத் தொகையும் 4ஐயே தரும். அவ் ஆண்டில் பிறப்பவர்களைக் கூட 4 என்ற எண் இராகுவினால் தோற்றுவிக்கப்பட்டவர்களே. அவர்களின் போக்குகளும் நடத்தைகளும் புரட்சியும் கிளர்ச்சியும்

எண் ஜோதிட நிபுணர்
**பேராசிரியர் ராஜராயேந்திரன்**

அவர்களின் விடிவில்லாத முடிவுகளையும் கூடக் கொடுத்து முடித்துவிடுகின்றது. இராகுவினுடைய தோற்றம் எப்படியோ அதன் செயற்பாடு எப்படியோ அதேபோன்ற தன்மையே எவர் 4 இல் பிறந்தாலும் கூட்டு எண்ணைத் தரப் பிறந்தாலும் அல்லது அசையும் அசைவற்ற எதிலும் இராகு ஆட்சி செயற்பட்டாலும் முடிவு பெரும் அர்த்தமற்ற விளைவுகளையே தீர்ப்பாக்கி விடுகின்றது.

(தொடரும்)

# கனிஷ்ட அதிகாரியொருவர் பொன்சேகாவை கைது செய்தமையானது சட்டத்திற்கு முரணானது

## அவரது சட்டத்தரணி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனரல் சரத்பொன்சேகாவை கனிஷ்ட அதிகாரியொருவர் கைது செய்ததாகவும் உயர் அதிகாரி ஒருவரை கனிஷ்ட அதிகாரி ஒருவர் கைது செய்ய முடியாது எனவும் இது சட்டத்திற்கு முரணானது என்றும் அவரது சட்டத்தரணி றொ மேஸ் டிசில்வா நீதிமன்றில் கூறி யுள்ளார்.

எந்த ஒரு இராணுவ. அதிகாரி யையும் கைதுசெய்யவோ அவரை விடுதலை செய்யவோ உயர் பதவி வகிக்கும் அதிகாரிக் கே அதிகாரம் உண்டு என தெரிவித்துள்ள அவர், சட்டத்தில் காணப்படும் குறைபாடு களினால் தமது கட்சிக்காரர் பாதிக்கப்படக் கூடாதென வும் குறிப்பிட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டுள்ள போது ஜெனரல் சரத்பொன்சேகா இராணுவத்தில் கடமை யாற்றவில்லை எனவும் அவர் ஓய்வுபெற்ற ஓர் அதிகாரியாக இருந்ததாக சட்டத் தரணி சுட்டிக்காட்டியுள்ளார். (6)

# தமிழக எம்.பிக்கள் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்

## அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு கிழக்கின் உண்மையான நிலைவரங்களை நேரில் கண்டறிவதற்காக அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் தமிழக எம்.பிக்கள் இலங்கை வரவுள்ளனர் என ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தேசிய ஊடக மத்திய நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை நிலைவரங்களை சர்வதேசம் அறிந்து கொள்ள சிறந்ததொரு சந்தர்ப்பத்தை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். (6-4)













யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் புதிய அதிபராக அ.தியாகலிங்கம் நேற்று பதவியேற்றுக்கொண்டார். இவ் வைபவத்தில் புதிய அதிபரை முன்னாள் அதிபர் ஞானகாந்தன் மற்றும் ஆசிரியர்கள் அழைத்துவருவதையும் புதிய அதிபர் கடமையைப் பொறுப்பேற்பதையும் முன்னாள் அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் புதிய அதிபர் அமர்ந்திருப்பதையும் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதி அதிபர் செல்வி எம்.ரி.ஆர்.கனகரட்ணம் கடமையைப் பொறுப்பேற்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பாடசாலை மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை -2010

ஆசிரியர் :- எஸ்.ஏ.சந்திரபவன்
(கொழும்பு)

மாதிரி பரீட்சை–07
வினாத்தாள் –II

நேரம்- 1 மணி 15 நிமிடம்

❋ கீழுள்ள பாடலை நன்றாக வாசித்து அது தொடர்பான வினாக்களுக்கு விடை தருக.

ஔவைக் கிழவி நம் கிழவி
அமுதின் இனிய சொற்கிழவி
செவ்வை நெறிகள் பற்பலவும்
தெரியக் காட்டும் தமிழ்க் கிழவி

கூழுக்காகக் கவி பாடும்
கூனற் கிழவி அவர் உரையை
வாழும் வாழ்வில் ஒரு நாளும்
மறவோம் மறவோம் மறவோமே

**01.சரியான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1.**கிழவி** என்பதன் கருத்து யாது?..............................

2.**செவ்வை** என்பதன் ஒத்த பதம் எழுதுக? ..............................

3.**பற்பல** என்பதனைப் பிரித்தெழுதுக? ..............................

4.**கூனல் கிழவி** என்பதில் வந்துள்ள அடைமொழி யாது?..............................

5.**வாழும் வாழ்வில்** என்பது என்ன காலம்?..............................

6.**நாளும்** என்பதனைப் பன்மையாக எழுதுக?..............................

7.பாடலில் உள்ள உயர்திணைச் சொல் ஒன்று எழுதுக?..............................

8.**அமுதின் இனிய** என்பதன் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக?..............................

9.பாடலுக்குப் பொருத்தமான ஒரு தலைப்பினை எழுதுக? ..............................

10. **அவர் + உரை** என்பதனைச் சேர்த்தெழுதுக?..............................

*(10 புள்ளிகள்)*

**02. 1. பின்வரும் சொற்களின் ஒத்த கருத்தினை எழுதுக?**

1.கவி.................................2 நெறி.................................

**2.பின்வரும் சொற்களின் எதிர்க்கருத்தினை எழுதுக.**

1. வாழ்வில் ................................ 2. இனிய ................................

**3. கீழ்வரும் ஆண்பாற் சொற்களுக்கான பெண்பாற் சொற்களை எழுதுக?**

1. சேவகன் ................................ 2. பாதகன் ................................

**4.கீழ்வரும் ஒன்றன்பாற் சொற்களை பலவின்பாற் சொற்களாக எழுதுக.**

1.காய்.................................2.வேர் ................................

*(2x 4= 8 புள்ளிகள்)*


**03. கீழ்வரும் கூடுகள் அல்லது வாழிடங்கள் எப்பிராணிகளுக்குரியவை என அந்தந்தக் கூடுகளின் கீழ் பிராணிகளின் பெயர்களை எழுதுக.**



i)(......................) ii)(......................) iii)(......................) iv)(......................)

*(2x 4= 8 புள்ளிகள்)*

❋ **கீழே காணப்படும் நீளம் தொடர்பான படத்தினை அவதானித்து அதன் கீழ் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.**




**04. மேலே A,B,C,D,E என வெவ்வேறு அளவுகளுடைய 5 பென்சில்கள் காணப்படுகின்றன. அவற்றின்படி**

1.மிகவும் நீளம் கூடிய பென்சில் எது?
..............................

2.மிகவும் நீளம் குறைந்த பென்சிலின் நீளம் யாது?
..............................

3. ஒரே அளவுடைய இரண்டு பென்சில்களும் எவை?
..............................

4.மேலுள்ள 5 பென்சில்களையும் நீளத்தின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தும் போது நடுவில் வரும் பென்சில் எது?
..............................

5. பென்சில் B யிலிருந்து Cயின் நீளத்தைக் கழித்தெழுதுக.
..............................

6. எல்லாப் பென்சில்களினதும் மொத்த நீளம் யாது?
..............................

**05. கீழே காணப்படும் தூரங்களைக் காட்டும் அட்டவணையினை அவதானித்து விடை தருக.**

| | | | |
|---|---|---|---|
| | | | D |
| | | C | 55 |
| | B | 42 | ? |
| A | 73 | ? | ? |

(km - கிலோமீற்றரில்)

இங்கு A,B,C,D,E ஆகியன நான்கு மாவட்டங்களாகும். ஒரு மாவட்டத்தில் இருந்து இன்னொரு மாவட்டத்திற்குச் செல்லும் தூரங்களை இது காட்டுகின்றது. இதனடிப்படையில்,

1. A யிலிருந்து C யிற்கான தூரம் எத்தனை கிலோ மீற்றர்?
..............................

2. B யிலிருந்து D யிற்கான தூரம் எத்தனை கிலோ மீற்றர்?
..............................

3. A யிலிருந்து D யிற்கான தூரம் எத்தனை கிலோ மீற்றர்?
..............................

*(6 புள்ளிகள்)*

**06.கீழே காணப்படும் வினாக்களின் சரியான விடை எது என அடைப்பினுள் எழுதுக.**

பச்சோந்தி / அணில் / கரடி / தேனீ / தீக்கோழி / குரங்கு / வௌவால் /துருவக் கரடி

1. தனது உடலின் நிறத்தையே மாற்றிக் கொள்ளும் பிராணி எது?
(..............................)

2.உணவுகளை கொறித்து உண்ணும் பிராணி ஒன்று எழுதுக.
(..............................)

3. பனிப் பிரதேசத்தில் வாழும் பிராணி எது?
(..............................)

4.எட்டுக் கால்களையுடைய பிராணி எது? (..............................)

5.பூக்களில் தேனை உறிஞ்சிக் குடிக்கும் பிராணி ஒன்றினை எழுதுக.(..............................)

6.மிகப்பெரியதும் பறக்க முடியாததுமான பறவை எது?(..............................)

*(16 புள்ளிகள்)*

**07.கீழ்வரும் வினாக்களின் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. விவசாயி விளைந்த நெல் மணிகளை சேர்த்து வைக்கும் இடம் யாது?
1. பெட்டகம் 2.களஞ்சியம் 3.தொட்டி

2.கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று எது?
1.கிரிக்கெட் 2.டெனிஸ் 3.கிட்டிப்புள்ளு

3.இன்று சந்தையில் மீன் நல்ல சூடு.இங்கு சூடு என்பதன் கருத்து யாது?
1.வெப்பம் 2.ஒறுப்பு 3.தட்டுப்பாடு

4.முதலுதவிப் பெட்டியில் இருக்க வேண்டிய பொருள் அல்லாதது எது?
1.பஞ்சு 2.சுடுநீர்ப்பை 3.ஸ்தெதஸ்கோப்

5.இக்குறியீட்டை நோக்கியுள்ள வாகனங்கள் முன்னோக்கிச் செல்லலாம் என்னும் கருத்தைத் தரும் வீதி ஒளிச் சமிக்ஞையின்நிறம் யாது?
1.பச்சை 2.சிவப்பு 3.செம்மஞ்சள்

6.பாலைப் பொழிந்து தரும் பாப்பா!... இப் பாடலை பாடியவர் யார்?
1.ஔவையார் 2.பாரதியார் 3. தேசிக விநாயகம் பிள்ளை

7. கீழ் வருவனவற்றில் முள்ளந்தண்டில்லாத பிராணி எது?
1. திமிங்கலம் 2.ஆமை 3.கணவாய்

8.வெப்பப் பிரதேசத்திற்கு உரிய ஆடை எது?
1.பருத்தி 2.கம்பளி 3.பட்டு




9.ஒரு பூச்சியின் வாழ்க்கை வட்டத்துடன் தொடர்பற்ற சொல் யாது?
1.குடம்பி 2.நிறைவுடலி 3.அட்டை

10.கீழ் வருவனவற்றில் மிகவும் கனம் குறைந்த உலோகம் எது?
1.வெள்ளி 2.அலுமினியம் 3.பொன்

*(10 புள்ளிகள்)*

**08. கீழே காணப்படும் கணனி உபகரணங்களின் பெயர்களை அடைப்பினுள் இருந்து தெரிந்து எழுதுங்கள்.**

| Floppy | Disc (CD) | Printer | Scanner |
|---|---|---|---|

i) 
ii) 
iii) 
iv) 

(..............................) (..............................) (..............................) (..............................)

*(09 புள்ளிகள்)*

**09. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.**

i.Beens (....................................................)

ii.Coconut(....................................................)

iii.Papaw (....................................................)

iv. Wood Apple(..........................................)

*(04 புள்ளிகள்)*

**14.பின்வரும் தமிழ்ச சொற்களுக்குரிய சிங்களச் சொற்களை எழுதுக.**

i.கடதாசி (..........................................)

ii.கத்தரிக்கோல்(..........................................)


iii.பாம்பு(..........................................)

iv.பூனை(..........................................)

*(04 புள்ளிகள்)*

**10. கீழே சில எளிய பொறிமுறைகள் தரப்பட்டுள்ளன. கீழுள்ள சொற்களை அப்பொறிமுறைக்கு ஏற்ப அவற்றின் ஆங்கில எழுத்துக்களை அடைப்பினுள் எழுதுக.**

a.சில்லும் அச்சாணியும் b.கப்பி c.நெம்புகோல் d.சாய்தளம்

1) 
2) 
3) 
4) 

(.............) (.............) (.............) (.............)

*(04 புள்ளிகள்)*

**11.கீழே காணப்படும் பொருட்களின் அளவுகள்,விலைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| பேனா | 2 | 24.00 |
| கொப்பி | 3 | 75.00 |
| பென்சில் | 1 | 7.50 |
| அடிமட்டம் | ஒரு டசின் | 40.00 |

i.அரை டசின் பேனாவின் .விலையாது?
..............................................................................

ii.ஒரு டசின் கொப்பியின் விலை யாது?
..............................................................................

iii.அடி மட்டம் ஒன்றின் விலை யாது?....
..............................................................................

iv.நான்கு பொருட்களிலும் ஒவ்வொன்று வாங்க எவ்வளவு பணம் தேவை?..
..............................................................................

**12.கீழ்வரும் வினாக்களுக்கான விடைகளை கூட்டிலுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

**(தீர்ப்பு /அகராதி/வேட்பாளர்/ உலோபி/அந்தபுரம்)**

1.தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர்
..............................................................................

2.அரண்மனைகளில் பெண்களுக்கான சிறப்பு இடம்.
..............................................................................

3.விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது
..............................................................................

4. தானும் உண்ணான் பிறருக்கும் ஈயான்
..............................................................................

5.அகரவரிசைப்படி சொற்களுக்குப் பொருள் கூறும் நூல்
..............................................................................

**13. கீழே 3 காட்சிகள் தரப்பட்டுள்ளன. காட்சிகளின் படிமுறைகள் அவதானித்து அவை தொடர்பாக காட்சிகளுடன் மிகப் பொருந்தும் கருத்துள்ள 6 வாக்கியங்கள் எழுதுக.( காட்சிகள் காணப்படும் சிறுவர்களின் பெயர்களை கமலன் மற்றும் நிசார் எனக்கொள்க.**





i..............................................................................
..............................................................................

ii..............................................................................
..............................................................................

iii..............................................................................
..............................................................................

iv..............................................................................
..............................................................................

v..............................................................................
..............................................................................

# யுத்தத்தின் பின்னரான இலங்கை

# பெல்ஜியத்தின் தலை நகரில் வட்டமேசை கலந்துரையாடல்

(நேற்றைய தொடர்ச்சி)

மூன்றாவதாக 2 நிமிடம் தனது குறிப்பைக் கூறிய ராதிகா தேவகுமார் இலங்கையின் பாடசாலைகளில் அனைத்து இன,மத, மொழி மாண வர்களும் ஒரு சாரக் கல்வி பயி லும் புதிய முறை உருவாக்கப்பட வேண்டும் என்பதனை மட்டும் கூறி உரையை முடித்துக் கொண்டார்.

இறுதியாக போருக்குப் பிந்திய இலங்கையின் நிலை என்ற தொனிப் பொருளில் தனது அறிக் கையை முன் வைத்த நடராஜா குருபரன் வடக்கு-கிழக்கில் பின் நிலவுகின்ற உண்மை நிலைமைகளை ஆதாரங்களுடன் முன்வைத்தார்.

குறிப்பாக போருக்குப் பின்ன ரான நிலைக்கும் முன்னரான நிலைக் கும் இடையே மாற்றங்கள் இருக்கின் றனவா எனக் கேள்வி எழுப்பினால் இல்லை என்ற பதிலே கிடைக்கும் என்ற முதலாவது கருத்துடன் 13 பகுதிகளாக முக்கிய விடயங்களை ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

பகுதி-1

போருக்குப் பின்னரான



இலங்கையின் நிலைமைகள் போர் முடிந்ததன் பின்னரான இலங்கைக்கும் அதற்கு முந்தைய இலங்கைக்கும் இடையில் மாற்றங்கள் ஏதேனும் உள்ளனவா? பதில்:-இல்லை

பகுதி-2

தோல்வி அடையும் அரசின் குணங்குறிகள் பெருமளவிலான மக்களின் இடம்பெயர்வு (உள்நாட்டி லும் வெளிநாட்டிலும்) இனங்களுக் கிடையில் சமச்சீர் அற்ற பொரு ளாதார வளர்ச்சி குற்றச் செயல்களின் அதிகரிப்பும் அரசின் சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளும் பெரு மளவிலான மனித உரிமை மீறல்களும்.

பகுதி-3

அரசின் தோல்வி-இரண்டு வகையானது.

அ)யாப்பு முறையில் உள்ளதோல்வி:-

1.யாப்பில் உள்ள முரண்பாடுகள்

2.சிறுபான்மையினங்களின் உரிமைகள் பற்றி அக்கறைப்படாத யாப்பு உள்ளடக்கம்

3.மத்தியில் குவிக்கப்பட்டு உள்ள அதிகாரமும் மறுக்கப்படும் அதிகாரப் பரவலாக்கமும்

ஆ.நீதித் துறையின் தோல்வி

1.சிறுபான்மை இனங்களுக்கு இழைக்கப்படும் அநீதி

2.அதிகாரத் துஸ்பிரயோகம்

3.நீதி முறையில் அரசாங்கத்தின் தலையீடு

4.இலங்கைக்குத் தமிழர்கள் நீதித் துறையிடம் எதிர்பார்த்த நீதியை அது வழங்கத் தவறி உள்ளது.

5.நீதியை எதிர்பார்த்த தமிழர்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்க இலங்கையின் மனித உரிமைகள் சமூகம் தவறிவிட்டது.

இ)வெகுஜன ஊடகங்கள் மீதான அடக்குமுறை.

காணாமல் போகும் பத்திரிகை யாளர்கள்.

பொலிஸ் மற்றும் அரச அதி காரத்துவத்தால் மேற்கொள்ளப்படும் கொலைகள், தணிக்கை.

நியாயமற்ற கைது நடவடிக்கைகள் ஊடகங்கள் மீது விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள்.

இராணுவ மற்றும் துணை இராணுவக் குழுக்களால் விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள்.

ஈ)கலைப்பண்பாட்டு அழிப்பும் பண்பாட்டு ஆதிக்கமும்

கலை, பண்பாடு பாரம்பரிய அழிப்புகள் குறித்தும் விரிவான தகவல்கள் வழங்கப்பட்டன. குறிப்பாக படையினரால் கைப்பற் றப்பட்ட அல்லது அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பல பகுதிக ளின் பெயர்கள், வீதிகளின் பெயர் கள், சிங்கள மொழிப்பெயர்களாக மாற்றப்பட்டுள்ளன. கலாசாரப் பொருள்கள் களவாடப்பட்டு அல்லது அழிக்கப்படுகின்றமை சுட்டி காட்டப்பட்டது. புத்த கோவில்கள் கட்டப்படுவதோடு இந்து ஆலயங்கள் உடைக்கப்படுகின்றமையும் கவனத்தில் கொண்டு வரப்பட்டது.

ஊ)போர்க்குற்ற நடவடிக்கைகள்:-

1.குறிப்பிடத்தக்க அளவிலான போர்க்குற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

2.வெள்ளைக்கொடியுடன் சரணடைந்த விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்.

3.சுயாதீன விசாரணைக்குழு இடமளிக்கப்படாமை

4. சனல் 4இன் குற்றச்சாட் டுகளுக்கு முறையான பதில் இல்லை.

ஊ)நில ஆக்கிரமிப்பு:-

1.தோல்வி அடையும் மீள் குடி யேற்ற நடவடிக்கைகளும் அரசாங் கத்தின் அசமந்தப் போக்கும்.

2.இன்னும் 80000 மக்கள் அகதி முகாம்களில் உள்ளனர்.

3.மீளக் குடியேற்றப்பட்ட வர்களுக்கு முறையான உதவிகள் வழங்கப்படாமை.

4.இன்னும் மீளக் குடியேற அனுமதிக்கப்படாத பிரதேசங்கள்

5. மீன் பிடித் தடைகள்

6. உயர்பாதுகாப்பு வலயங்கள்.

இந்த இடத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் சாந்தபுரம், முல்லைத்தீவின் செல்வபுரம், திருமுறிகண்டிப் பிரதேசங்கள் அடங்கிய 2000 ஏக்கர் வளமான நிலத்தை இராணுவத் தேவைகளுக்கு என அரசாங்கம் கையகப்படுத்தி உள்ளமை கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

திருகோணமலையின் சம்பூர் பிரதேசத்தில் அனல் மின்நிலைய அமைப்பு என்ற போர்வையில் 4000 ஏக்கர் மக்களின் வளமான காணிகள் அபகரிக்கப்பட்டமை கவனத்தில் கொண்டுவரப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் குடும்பிமலைப் பிரதேசம், அம்பாறையில் முஸ்லிம்களின் காணிகள் என்பன அரசால் கையகப்படுத்தப்பட்டமை கவனத்திற்கு கொண்டுவரப் பட்டது.வடகிழக்கில் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்வதில் தொடரும் கட்டுப்பாடுகள் மற்றும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் மக்களின் வாழ்விடங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாக தொடர்ந்தும் பேணப் படுகின்றமை என்பனவும் கவனத்தில் கொண்டுவரப்பட்டது.

எ)தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமை:-

கிருஸாந்தி குமாரசாமி முதல் விடுதலைப்புலிகளின் பெண் போராளிகள் வரை.

இந்த இடத்தில் அண்மையில் கிளிநொச்சி விஸ்வமடுவில் இரு பெண்கள் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்டது. இது முழு மையாகப் பொய் எனவும் அண்மையிலேயே தான் இலங்கை சென்று திரும்பியதாகவும் அங்கு நிலைமைகள் மிக உன்னதமாக இருப்பதாகவும் டக்ளஸ் விக்கிர மரட்ண வாதிட்டார். அதற்குப் பதில் அளித்த குருபரன், அவ்வாறாயின் இலங்கையின் பத்திரிகைகள் கூறியது பொய்யா எனக் கேள்வி எழுப்ப பல ஊடகங்கள் பொய்யையே எழுதுகின்றன என வாதிட்டார். அவ்வாறாயின் இலங்கை அரசாங்கத் தின் நீதிமன்றம் சம்பந்தப்பட்டவர் களை விளக்க மறியலில் வைக்கச் சொல்லி உள் ளதே. நீதிமன்றமும் பொய்யா என குருபரன் கேள்வி எழுப்ப டக்ளஸ் விக்கிரமரட்ண மௌனமானர்.

ஏ)தமிழர் பிரதேசங்கள் இராணுவமயப்படுத்தல்

1. பெரும்பான்மை மக்களின்



அரசாங்கம்

2. காலனித்துவத்திற்கு பின்னரான காலத்தில் இருந்து இன்று வரை சிங்கள அரசாங்கங்கள் சிங்கள பௌத்த அடையாளத்தையே கொண்டிருந்தன.

3. சிறுபான்மை இனங்களுக்கு பாதுகாப்பையும் அதிகாரப் பரவலாக் கத்தையும் வழங்க என செய்யப்பட்ட அனைத்து சமரச முயற்சிகளும் இன்றுவரை தோல்வி அடைந்த வர லாற்றுப் படிப்பினை

4. பெரும்பான்மை இனத்தவரின் அதிகாரங்களை பலப்படுத்துதல்

ஐ)இராணுவமயமாக்கம்

1. வரவு செலவுத் திட்டத்தில் முன்னரை விட அதிகாரங்களை பலப்படுத்துதல்

2.சிங்கள மயப்படுத்தப்பட்ட அரசாங்கம்

3. இராணுவ மயமாகும் வடக்கு-கிழக்கு. இந்த இடத்தில் வடக்கு - கிழக்கு மாகாண சபைகளின் ஆளுனர் முதல் வடக்கு- கிழக்கு மாவட்டங்கள் சில வற்றின் அரசாங்க அதிபர்கள் வரை உயர் படை அதிகாரிகளே கடமை புரிவது புள்ளி விபரங்களுடன் விளக்கப்பட்டது. இது குறித்து விவாதத்தில் ஈடு பட்ட டக்ளஸ் விக்கிரமரட்ண கிழக்கின் முதலமைச்சர் ஒரு தமிழரே எனக் குறிப்பிட்டார். அதற்குப் பதிலளித்த குருபரன், கிழக்கு மாகாண சபையில் விமல வீர திஸ்ஸநாயக்க மாகாண சபையின் அதிகாரம் குறித்தும் மாகாண ஆளுநரின் அளவுக்கு மீறிய தலை யீடு குறித்தும் தெரிவித்த கருத்து ஆதாரபூர்வமாக தெரிவிக்கப் பட்டதுடன் முதலமைச்சர் ஒரு டம்மி என்பது தெளிவுபடுத்தப்பட் டது. அண்மையில் முதலமைச்சர் செய்த சாரதி நியமனங்கள் இரத்துச் செய்யப்பட்டமை சுட்டிக் காட்டப்பட்டது.

இதேவேளை நீங்கள் அனை வரும் ஒரு தரப்பு புலிகள் சார்பில் பேச வந்திருக்கிறீர்கள் என டக்ளஸ் விக்கிரமரட்ண தெரிவித்த குற்றச் சாட்டுக்கு பதிலளித்த குருபரன், தமிழ் மக்களின் அல்லது சிறுபான் மையினரின் உரிமைகள், பிரச் சினைகள் குறித்து பேசுபவர்களை தயவு செய்து புலிகள் என முத்திரை குத்தாதீர்கள் எனத் தெரிவித்ததோடு தான் புலிகளால் ஒரு கிழமை தடுத்து வைக்கப்பட்டதனையும் பின்னர் 1990இல் முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்ட போது அதனை வன்மையாக கண்டித்து தலைப்புச் செய்தியாக ஈழத்தின் தேசியத் தற்கொலை எனத் தான்பணியாற்றிய சரிநிகரே எழுதி இருந்ததனையும் சுட்டிக்காட்டினார். இதனால் சரிநிகர் பத்திரிகை வடக்கு-கிழக்கில் தடைசெய்யப்பட்டதனையும் சுட்டிக்காட்டினார். இறுதியாக இலங்கைத் தூதரகத்தின் சார்பில் பதிலளித்த அதிகாரி குருபரன் மற்றும் இங்கு கலந்து கொண்ட வர்கள் மிகைப்படுத்திக் கூறியுள் ளார்கள். பல பிரச்சினைகள் இடம் பெற்றுள்ளன, தொடருகின்றன. ஆனால் அவை அரசாங்கத்தால் தீர்க்கப்படுகின்றன என சுருக்கமாகப் பதிலளித்து தனது கருத்தை முடித்துக் கொண்டார்.

இலங்கை அரசாங்கத்தின் சார் பில் கலந்து கொண்ட அதிகாரிகள்

**குளோபல் தமிழ் நியூஸ் நெற்**

இலங்கையின் இன்றைய நிலைவரம் தொடர்பாக சுனந்த தேசப்பிரிய, எம். சி.எம்.இக்பால், நடராஜா குருபரன் ஆகியோர் முன்வைத்த கருத்துகளுக்கு முறையான பதில்கள் எதனையும் வழங்க முடியாது திண்டாடியமையை அங்கு அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (முற்றும்)

# சட்டவிரோத முகவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

## இலங்கையிடம் அமெரிக்கா கோரிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமாக ஆட்கள் வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்லப்படும் சம்பவங்கள் குறித்து வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக பொய்யுரைத்து அதிக பணத்தை வசூலிக்கும் மோசடி முகவர்களை இலங்கை அரசாங்கம் சடத்தின் முன் நிறுத்தி விசாரணை செய்து தண்டிக்க வேண்டும் என்று சட்டவிரோத ஆட்கடத்தல் சம்பவங்கள் பற்றிய அமெரிக்காவின் 2010 ஆம் ஆண்டு அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த மோசடிகளை ஒழிப்பதற்கான ஆகக்குறைந்த தரத்தை இலங்கை முழுமையாகக் கடைப்பிடிக்காத போதிலும் குறிப்பிடத்தக்க அளவு முயற்சி எடுக்கிறது என்று அமெரிக்க அறிக்கை தெரிவித்துள்ளது. மோசடி ஆட்சேர்ப்பில் ஈடுபடும் முகவர்களை நீதி விசாரணைக்கு உட்படுத்துவதற்கான சட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்துள்ள போதிலும் மோசடி வர்த்தகர்களால் பாதிக்கப்படுவோரை இனம் காண்பதில் அது முன்னேற்றமடையவில்லை.

இந்த காரணங்களின் விளைவாக அமெரிக்காவினால் கண்காணிக்கப்படும் நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாம் இடத்தில் வைக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்காவின் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமாக செல்வதனாலும் வேலைவாய்ப்பைப் பெறுவதற்காக பதிவு செய்யப்படாத முகவர்களை நாடுவதனாலும் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றி மக்களுக்கு எச்சரிக்கை செய்யும் வகையிலான அறிவுரைகளை வெளியிடும் முயற்சிகளை இலங்கை வேலைவாய்ப்பு பணியகம் மேற்கொண்டு வருவது குறித்து அறிக்கையில் வரவேற்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசாங்கம் 184 மோசடி வெளிநாட்டு முகவர்கள் நிலையங்களில் திடீர் சோதனைகளை நடத்தி அவர்களில் சிலர் மீது சட்ட நடவடிக்கை எடுத்துள்ளமையையும் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்காவின் அறிக்கை பற்றி கருத்து தெரிவித்த வெளிநாட்டு பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க, மோசடி வேலைவாய்ப்பு முகவர்கள் குறித்து முறைப்பாடுகள் கிடைக்கும்போது, அவை பற்றிய விசாரணை நடத்தி அவர்களை கைதுசெய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதாக தெரிவித்தார்.

மோசடி முகவர்கள் மீது விதிக்கப்படும் அபராத தொகையை அதிகரிப்பதற்கும் தாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

கடந்த வருடம், புலம்பெயர் தொழிலாளர்கள் வெளிநாட்டுவேலையைப் பொறுப்பேற்க முன்னர் வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு வந்து உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்றும் ரவணவக்க தெரிவித்தார்.

புலம்பெயர் தொழிலாளர்கள் முறைப்பாடு எதுவாயினும் செய்ய வேண்டுமாயின் அதற்கு வசதியாக அவர்கள் பணியக உத்தியோகத்தர்களை இலகுவில் தொடர்பு கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார். (6-4)

# பொதுநலவாய மாநாட்டில் சரத்பொன்சேகா கலந்துகொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்

## அனுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

கென்யாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு அனுமதி அளிக்கப்பட வேண்டுமென ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் அதி உயர் பீடமான நாடாளுமன்றம், சரத்பொன்சேகா பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு எவ்வித தடையும் விதிக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இம் மாநாட்டில் சரத் பொன்சேகா கலந்துகொள்வதில் சிக்கல் இல்லை என குறிப்பிட்டுள்ள அனுரகுமார திஸாநாயக்க, ஏதாவது ஒரு காரணத்திற்காக சரத்பொன்சேகாவிற்கு இந்தச் சந்தர்ப்பம் மறுக்கப்பட்டால் அது தொடர்பில் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பப்படும் எனவும், இதேவேளை, சட்டத்தின் அனுமதியின்றி சரத்பொன் சேகாவை கென்யா செல்ல அனுமதிக்க முடி யாது என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பதோடு, சரத்பொன்சேகா பிணை வழங்கப்பட முடியாத குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள ஓர் சந்தேக நபர் என்பதனை கவனத்திற் கொள்ளவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றம் செல்ல அனுமதித்தாலும், சட்டத்தின் அனுமதியின்றி சரத்பொன்சேகா வெளிநாடு செல்ல அனுமதிக்க முடியாதெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-4)

# நாட்டிற்கு பொருத்தமான விதத்தில் அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

## குணதாச அமரசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவிற்கு ஏற்ற விதத்திலோ அல்லது இந்தியாவின் விருப்பத்திற்கமையவோ இலங்கையின் அரசியல் அமைப்பை உருவாக்க முடியாது. மாறாக தற்போதைய காலச்சூழலுக்கு ஏற்ப தமது நாட்டிற்கு பொருத்தமான விதத்திலேயே அது உருவாக்கப்பட வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்தை தூக்கி எறிந்துவிட்டு நாட்டின் தேசியத்திற்கு பங்கம் ஏற்படாத வகையில் புதிதாக அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் தேசிய புனர்ஜீவன ஆணைக்குழு தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடொன்று சத்சிறிபாயவில் இடம்பெற்றது. அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, எமது நாட்டில் அரசியல்,பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியாக பாரிய பிரச்சினைகள் உள்ளன. அவற்றைச் சரியான முறையில் இனம் கண்டு தீர்க்க வேண்டும்.

அதற்கான ஓர் ஆரம்ப கட்டமே இந்த தேசிய புனர்ஜீவன ஆணைக்குழுவாகும். இந்த ஆணைக்குழு தொடர்பான முழு விபரங்களையும் நாம் ஊடகங்களில் அறிவிப்போம். அதன்பின்னர் பொதுமக்களும் புத்திஜீவிகளும் தமது ஆலோசனைகளையும் முறைப்பாடுகளையும் எமதுகுழுவுக்கு அனுப்பலாம். அதனை நாம் பரிசீலிப்போம்.

இன்று நாட்டில் யுத்தம் முழுமையாக முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.இருந்தும் சர்வதேச மட்டத்திலிருந்து எமது நாட்டிற்கெதிராக பல்வேறு வடிவங்களில் அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன.

அவற்றிற்கெல்லாம் நாம் அடிபணியாமல் எமது நாட்டிற்கேற்றதும் பொதுமக்களின் விருப்பத்திற்கமைவானதுமான முடிவுகளையே எடுக்கவேண்டும் என்று தெரிவித்தார். (6-4)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## இன்று ஆறாம் திருவிழா

### பெரிய நயினை நாயகியே!

பெரிய நயினை நாயகியே!
மணிபல்லவத்தில் அமர்ந்த வளே!
மனத்துள் மணமாய்க் கமழ்பவளே!
அணிசேர் தமிழாய் ஆனவளே !
அருணக் கதிராய் உதிப்பவளே!
மணிசேர் ஒளியாய் ஒளிர்பவளே!
மாறா ஒன்றாய் நிலைத்தவளே!
பிணிதீர் மருந்தாய் இருப்பவளே!
பெரிய நயினை நாயகியே!

நிவேதிதா

### நயினையில் குடிகொண்ட நாகம்மா

நயினையிலே குடிகொண்டஅம்மா தாயே
நாகபாம்பின் மீதிருக்கும் அம்மா தாயே
நலிந்தவர்க்கு கரம் கொடுக்கும் அம்மா தாயே
நாடியோரை நலம் காக்கும் அம்மா தாயே
அலை கடலின் மத்தியிலே அம்மா தாயே
அழுவோரை அரவணைக்கும் அம்மா தாயே
அன்பாலும் அமுதாலும் அம்மா தாயே
அனைவரையும் ஆறவைக்கும் அம்மா தாயே

சிவராசா இராசமணி, நல்லூர்

### வந்தவினை போக்கிடம்மா

நயினையம்பதியில் கோயில்
கொண்டவளே
நாகரவம்மேல் பள்ளி
கொள்பவளே
கருணையில் பூத்த காரிகை
தாயே
கடலலையில் துயிலெழும்வாரகியும்
நீயே...
வரந்தனை ஈர்ந்து வந்தவினை
போக்கிடம்மா
வாழ்வளித்து நாளும்
எமைக்காத்திடம்மா

க.நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்

### அருள் தருவாய் நாகதாயே...!

அலைகடலின் நடுவில் வீற்றிருக்கும் நாகதாயே
அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாய்த் திகழ்பவளே!
பாம்பணையில் பள்ளிகொள்ளும் தேவி –நீ
எம் துயர்கள் எல்லாவற்றையும் நீக்கிவிடு

மக்களின் துன்பங்களைப் போக்கும் தேவியே!
உன் புதுமைகள் இங்கு சொல்லிலடங்கா
உனக்கு நிகரான வேறு தெய்வமுள்ளதோ!
நயினை நாக பூசணியே அருள் தருவாய்

பி.நிரோஜினி, யாழ்ப்பாணம்

ஏஸ்வரன் ரான்ஸ்போர்ட் சேவிஸ்
இல.115,69 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2813

# பஸ்ஸில் நண்பராக அறிமுகமாகி பணத்தை அபகரித்த இளைஞர்

(கொழும்பு)

ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் இடை நடுவில் அறிமுகமான நண்பர் ஒருவர் வழங்கிய இனிப்புப் பண்டத்தை உட்கொண்டு மயக்கமடைந்த இளைஞர்கள் இருவரிடமிருந்து இலட்சக்கணக்கான பணமும் பெறுமதியான பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் கொழும்பு - கண்டி பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து கம்பளை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

கம்பளைக்கு பயணித்துக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் அருகிலிருந்த இளைஞர்களிடம் நண்பராக அறிமுகம் செய்து கொண்டதுடன் தான் வைத்திருந்த இனிப்பை இருவருக்கும் வழங்கியுள்ளார்.

புதிய நண்பன் இனிப்பை தானும் சாப்பிட்டதால், எவ்விதமான சந்தேகத் தையும் கொள்ளாத இளைஞர்கள் இருவரும் இனிப்பை உட்கொண்டனர். சிறிது நேரத்தில் இளைஞர்கள் இருவரும் மயக்க மடைந்தனர்.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, குறித்த இளைஞன் மயக்கமடைந்த இளைஞர்களிடமிருந்து ஒரு இலட்சத்து ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைபேசி மற்றும் பணத்தை கொள்ளையடித்துக்கொண்டு தலைமறைவாகியுள்ளார்.

மயக்கமடைந்த இளைஞர்கள் கம்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு சம்பவம் தொடர்பில் கம்பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6)

# விடுதலைப்புலி நடவடிக்கைகள் குறித்த ஹவானா அறிக்கை ஒப்படைக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்த ஹவானா அறிக்கை இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வெனிசுலா நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மீள் அணி திரளும் நடவடிக்கைகள் குறித்து இந்த அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளதாகவும் வெளிவிகார அமைச்சு இந்த அறிக்கையை உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கியூபாவிற்கான இலங்கைத் தூதுவர் தமாரா குளியநாயகம் அண்மையில் வெனிசுலாவிற்கு விஜயம் செய்து இந்த விடயம் குறித்து ஆராய்ந்துள்ளதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாடு கடந்த தமிழீழ இராச்சிய உருவாக்க முனைப்புக்களுக்கு இடமளிக்கக் கூடாது என அரசாங்கம் வெளிநாட்டு அரசாங்கங்களை வலியுறுத்தத் திட்டமிட்டுள்ளது. (6)

# முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி பணிகளுக்காக 6 குழுக்கள் நியமனம்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திப் பணிகளை துரிதமாக மேற்கொள்வதற்காக ஒவ்வொன்றும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டதாக ஆறு குழுக்கள் நியமிக்கப் பட்டுள்ளன.

திட்டமிடல், வீடமைப்பு, மீன்பிடி, உள்ளூராட்சி, நீர்மின்சாரம், உட்கட்டமைப்பு, வீதி அபிவிருத்தி மற்றும் விவசாயம் ஆகிய துறைகள் உள்ளடங்கலாகவே ஆறு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அடுத்த பெரும் போகத்தின் போது 25 ஆயிரம் ஏக்கர் வயற்பரப்பில் பயிர் செய்கைகளை மேற்கொள்ளவும் 9620 ஏக்கர் நிலப்பரப்பில் உப உணவு பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திக் குழு கூட்டம் வன்னி மாவட்ட எம்.பியும் கைத்தொழில் வாணிபத்துறை அமைச்சருமான ரிஷாத் பதியுதீன், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரின் கூட்டுத் தலைமையில் நேற்று முன்தினம் காலை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

சுமார் 20 வருடங்களுக்குப் பிறகு முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றதாக தெரிவித்த அமைச்சர் ரிஷாட் பதியுதீன் பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதாகவும் குறிப்பிட்டார். (6-4)

# யுத்த கொண்டாட்ட நிகழ்வுகளில் ஒன்பதாயிரம் படையினர் பங்கேற்பு

## இராணுவப்பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வுகளில் 9 ஆயிரம் படையினர் பங்கேற்க உள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.


தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தம் நிறைவடைந்து ஓராண்டு பூர்த்தியாவதனை குறிக்கும் வகையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலிமுகத்திடலில் விசேட நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாகவும் இந் நிகழ்வில் முப்படையினர், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரும் கலந்து கொள்ள உள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மோசமான காலநிலை காரண மாக கடந்த மாதம் நடத்தப்படவிருந்த கொண்டாட்டங்கள் இம்மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.



மேலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, பாதுகாப்புச் செயலாளர், முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-4)

# இணுவை கந்தனின் மஹோற்சவம்



## இன்று கொடியேற்றம்

## மங்கள நாயகன் மயிலன் இணுவைக் கந்தன்

மங்களநாயகன் மயிலன் இணுவைக் கந்தன்
பொங்கிடும் இன்பமெல்லாம் பொலிந்திட அருள்பவன்

கங்கை மதிசூடும் கபாலீஸ்வரன் புதல்வன்
மங்கை மஹாலக்ஷ்மி மால் மருகன் முருகா

ஏழிசை முழங்கிடும் இணுவையம்பதியினில்
கோழிக் கொடி பிடித்து கூர்வேலேந்திடும் குகன்

ஆழித்தமிழ் கவிதை ஆனந்தமாய் மாந்துபவன்
வாழி சொல்லி வாழ்த்துவோம் வளமெலாம் அருளுவான்

ஆறுமுகன் அழகன் அவன் பதம் வாழ்த்துவோம்
ஏறுமயில் சேவல் ஏந்தலையும் வாழ்த்துவோம்

வீறுகொள் வேலையும் வள்ளிகுஞ்சரியை வாழ்த்தி
ஆறுதல் தருமந்த ஆறுமுகனை பாடுவோம்

அமரர்.பிரம்மஶ்ரீ மகாவித்துவான் வீரமணி ஐயர்

## அருள்பொழிந்திடுவாய் முருகா

பொற்பதம் பணிகின்றோம்
இணுவையில் உன் பொற்பதம் பணிந்து
உள்ளம் உருகி
இருகைகூப்பி வணங்கி
உன் அருளைப் பாடும்
கொடியேற்ற தினத்திலே
பக்தர்களின் வேண்டுதலை
தீர்த்திடுவாய் சீக்கிரமே...!

தாவடி மைந்தன்

## இணுவை கந்தனின் கொடியேற்றம் காண்போம் வாரீர்

இயலிசை நாடகம் முத்தமிழ் கலைவளர்
இன்பமுறு சோலை திகழ் இணுவைக் கந்தனின்
கொடியேற்றம் காண்போம் வாரீர்
கோடி இன்பம் காண்போம் வாரீர்

பண்ணுடன் பாடிப்பக்தர் பரவசம் அடையும் வேளை
வண்ணமயில் வடிவேலன் வள்ளிதெய்வ யானையுடன்
மெல்ல மெல்ல ஆடிவந்து புன்னகை புரிந்த வண்ணம்
வெண்பட்டு குடையின் கீழ் எழிலுடன் வீற்றிருக்க

வேழமுகத்தவனும் அதனருகில் வீற்றிருக்க
நாதமேள கீதங்கள் நாற்றிசையில் ஒலி பரப்ப
வேதமோடு ஆகமத்தை வேதியரும் ஓதி நிற்க
மூவரொடு தேவரும் யாவரும் மகிழ்ந்து நின்று பூமாரி பொழிய

பதிபசு பாசம் என்னும் முப்பொருள் தனை உணர்த்தும்
கொடிமரம் தன்னில் கொடி ஏறுது பாரில்

இணுவையூர் செ.பவானந்தமூர்த்தி

(1709)

அனுசரணை:- 1ஆம் திருவிழா உபயகாரர்
போட்டோ கனொன்

# போலி வங்கி வலையமைப்பை ஏற்படுத்தி பல பில்லியன் ரூபா மோசடி செய்தவர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் போலி வங்கி வலையமைப்பினை ஏற்படுத்தி பொதுமக்களிடமிருந்து பல பில்லியன் ரூபாய் மோசடி செய்த சந்தேக நபரை பொலிஸார் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தியுள்ளனர்.

இச் சம்பவத்துடன் தொடர்புடையவரென்ற பெயரில் செல்லத்துரை தனராஜா என்பவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் தனது எண்ணத்தை நிறைவேற்றும் நோக்கில் நாடளாவிய ரீதியில் 39 போலி வங்கிக் கிளைகளை ஸ்தாபித்திருந்தாரென்ற தகவல் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து பொலிஸாருக்கு தெரியவந்துள்ளது.

இந்தப் போலி வங்கிகள் கிராமிய முதலீட்டு அபிவிருத்தி வங்கி நிறுவனம் எனும் பெயரிலேயே இயங்கி வந்துள்ளன. இதேவேள்ள சந்தேக நபர் தனது மனைவி மற்றும் உறவினர்களை உள்ளடக்கிய பணிப்பாளர் சபையொன்றினை நிறுவியதன் மூலமும் பல வாடிக்கையாளர்களை இதில் முதலீடு செய்ய வைத்திருப்பதாக பொலிஸார் கூறுகின்றனர்.

பொலிஸாரினால் தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் பிரதான சந்தேக நபர் போலி வங்கிகளுக்கான பணிப்பாளராக அதன் தலைமையகத்தில் செயலாற்றி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# சீனா - பாகிஸ்தான் அணுசக்தி ஒப்பந்தத்திற்கு அமெரிக்கா எதிர்ப்பு

(வோஷிங்டன்)

சீனா - பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையிலான அணுசக்தி ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பது என்று ஒபாமா நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

அமெரிக்காவும் இந்தியாவும் இராணுவத்தேவைகளுக்கு அப்பாற்பட்ட மின்சார தேவைக்கான அணுசக்தி ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டுள்ளன. அதன்படி மின்சார உற்பத்திக்கு தேவைப்படும் அணு சக்தி உற்பத்திக்கு அமெரிக்கா உதவும் என்பதுடன் இதற்கான மூலப்பொருள்களை அமெரிக்காவிற்கவும் முடியும்.

மேலும் இதனை பிற அணுசக்தி நாடுகளிடமும் இந்தியா கொள்வனவு செய்து கொள்ள முடியும்.

இதுபோன்ற ஒப்பந்தத்தை அமெரிக்காவுடன் செய்து கொள்ள பாகிஸ்தான் விரும்பியது. அப்படி ஒரு ஒப்பந்தத்தை தங்களுடன் செய்து கொள்ளவேண்டும் என்று அமெரிக்காவை அது வலியுறுத்தியது. இதற்கு அமெரிக்கா சம்மதிக்கவில்லை. பாகிஸ்தானின் அணு விஞ்ஞானி கான் அணு ஆயுத தொழில் நுட்பத்தை வட கொரியா, ஈரான் போன்ற நாடுகளுக்கு விற்றதை சுட்டிக்காட்டி அணு ஆயுத பரவலுக்கு வழிவகுத்த நாட்டுடன் உடன்பாடு செய்து கொள்ள முடியாது என்று அமெரிக்கா கூறிவிட்டது. இதை தொடர்ந்துதான் பாகிஸ்தான் மாற்று வழிகளை தேடியது.

சீனாவுடன் அணுசக்தி உற்பத்திக்கான ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றை பாகிஸ்தான் செய்து கொண்டது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் பாகிஸ்தானில் 2 அணு உலைகளை அமைக்க சீனா நிதி உதவி செய்கிறது.

அந்த உலைகளையும் சீனாவே கட்டிக் கொடுத்து வருகிறது. சீனா - பாகிஸ்தான் அணுசக்தி ஒப்பந்தத்தை எதிர்ப்பது என்ற தீர்மானத்தை அமெரிக்கா எடுத்து உள்ளது. இதற்கான நடவடிக்கைகளில் ஒபாமா நிர்வாகம் தீவிரமாக இறங்கி உள்ளது.

அணுஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத நாடுகளுக்கு அணுசக்தி பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு சர்வதேச தடை இருக்கிறது.

இந்த தடையை சீனா பாகிஸ்தான் ஒப்பந்தம் மீறி விட்டதாக நிபுணர்கள் கூறுகிறார்கள்.

அணுசக்தி பொருள்களை விநியோகம் செய்யும் 46 நாடுகளின் குழு கூட்டம் நியூசிலாந்து நாட்டில் அடுத்த வாரம் நடக்கிறது. இந்த கூட்டத்தில் இந்த பிரச்சினை பற்றி விவாதிக்கப்பட இருக்கிறது. (6-4)

# பங்களாதேஷில் நிலச்சரிவில் சிக்கி 40 பேர் பலியாகினர்

பங்களாதேஷில் பெய்து வரும் கன மழையால் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டது.

இதில் சிக்கி 40 பேர் உயிரிழந்துள்ளனர். வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக பங்களாதேஷில் கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக சிட்டகாங் மலைப்பகுதி, காக்ஸ் பஜார், பந்தர்பான் உள்ளிட்ட நான்கு இடங்களில் கடும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் சிக்கி 40 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஏராளமானோர் மண்சரிவில் சிக்கியுள்ளனர். இதனால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. மீட்புப் பணிகளில் இராணுவத்தினரும் தீயணைப்புப் படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (6)



கிர்கிஸ்தானில் ஏற்பட்ட இன கலவரத்தினால் பலர் கொல்லப்பட்டனர். இதில் பெருமளவு பாதிக்கப்பட்டோர் உஸ்பெஸ்கிஸ்தான் நாட்டினர்தான். அகதிகளாக தங்க இடமின்றி வீதியில் இருப்பதைவிட தங்கள் சொந்த நாட்டிற்கு செல்வதற்காக உஸ்பெஸ்கிஸ்தான் எல்லைப்பகுதியில் அவர்கள்




# பாகிஸ்தானுக்கு போர் விமானங்களை வழங்கியது அமெரிக்கா

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா F-16 ரக போர் விமானங்களை விற்றுள்ளது. ஆனால் அதே சமயத்தில் அதனை இந்தியாவிற்கு எதிராக பயன்படுத்தக்கூடாது என்று பாகிஸ்தானுக்கு எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

இந்த மாத முடிவில் F -16 ரக போர் விமானங்கள் 18 பாகிஸ்தான் வந்து சேர்கிறது. சமீபத்தில் இந்தியா- அமெரிக்கா இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போது பாகிஸ்தானுக்கு அமெரிக்கா செய்யும் பெரிய அளவிலான இராணுவ உதவி குறித்து இந்தியா தன் கவலையை தெரிவித்தது.

இதனையடுத்தே அமெரிக்கா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது. மேலும் பாகிஸ்தான் எந்த எதிர்கால வேற்றுமை நிலையிலும் இந்தியாவுக்கு எதிராக ஆயுதங்களை பயன்படுத்தக்கூடாது என்று பாகிஸ்தானுக்கு நிபந்தனை விதித்துள்ளதாக ஒபாமா நிர்வாகம் உறுதி அளித்திருந்தது.

F-16 போர் விமானங்களுடன் அமெரிக்க விமானப்படை பொறியிலாளர்களும் பாகிஸ்தான் விமான தளத்திற்கு வருகை தருகின்றனர். தலிபான் , அல்கொய்தா ஆகியோருக்கு எதிராக பாகிஸ்தான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் இவர்கள் மேற்பார்வையிடவுள்ளார்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (4)

# வளைகுடா நாடுகளில் இயற்கை எரிவாயு உற்பத்தி சரிவு

(டுபாய்)

எண்ணெய் வளம் கொழிக்கும் வளைகுடா நாடுகளில் இயற்கை எரிவாயு உற்பத்தி கணிசமாக குறைந்து வருகிறது. இதனால் சர்வதேச அளவில் இயற்கை எரிவாயு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகி உள்ளதாக சமீபத்திய ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளைகுடா நாடுகளில் எண்ணெய்வளம் அதிகம் காணப்படுகிறது. சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் வளைகுடா நாடுகளில் இயற்கை எரிவாயு உற்பத்தி தற்போது கடுமையாக சரிந்து விட்டது.

பக்ரைன்,குவைத், ஓமன், சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளில் இயற்கை எரிவாயு உற்பத்தி பெருமளவு குறைந்து விட்டது. இதனால் வளைகுடா நாடுகள் கூட்டமைப்பு கவலையில் ஆழ்ந்துள்ளது.

மேலும் இயற்கை எரிவாயு உற்பத்தி குறைவால் மின் உற்பத்தி கடுமையாக பாதிக்கும் என அந்நாடுகள் கருதுகின்றன. வளைகுடா நாடுகளில் இயற்கை எரிவாயு உற்பத்தி குறைவு சர்வதேச அளவில் பாதிப்பை ஏற்படுத்தும் என ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

இயற்கை எரிவாயு ஏற்றுமதி யில் கொடிகட்டி பறந்து வந்த வளைகுடா நாடு கள் தற்போது எரிவாயுவை இறக்குமதி செய் வது குறித்து பரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளன. (6)



மெக்ஸிகோ வளைகுடாவில் கச்சா எண்ணெய் கசிவினால் பாதிக்கப்பட்ட அமெரிக்காவின் மெக்ஸிபோர்ட் துறைமுகப் பகுதிக்கு வருகை தந்த ஜனாதிபதி ஒபாமாவை அப்பகுதி மக்கள் வரவேற்றனர்.

# சீனாவில் நிலச்சரிவு மற்றும் வெடிவிபத்தில் 21 பேர் பலி; 15 பேர் காயம்

(பீஜிங்)

சீனாவில் நேற்று முன்தினம் ஏற்பட்ட கடும் நிலச்சரிவு மற்றும் வெடிவிபத்துகளில் சிக்கி 21 பேர் உயிரிழந்தனர். 15 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சீனாவில் சிச்சுவான் மாகாணப் பகுதியில் பெய்த பலத்த மழையால் நிலச்சரிவு ஏற்பட்டது. நிலச்சரிவால் இப்பகுதியில் கட்டுமானப் பணிகளுக்காக அமைக்கப்பட்டிருந்த கூடாரங்கள் அழிந்தன.

இதில் 17 பேர் உயிரிழந்ததுடன் 7 பேர் காயமடைந்துள்ளனர். மேலும் 6 பேரை காணவில்லை எனவும் செவ்வாய்க்கிழமை அதிகாலை 1.25 மணிக்கு இந்த சம்பவம் நடந்தது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிலச்சரிவு நடந்த பகுதிக்கு விரைந்த தீயணைப்புப்படையினர் அங்கு தீவிர மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இதேவேளை ஹெனன் மாகாணத்தில் ஷியாடியன் பகுதியில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்தனர்.

இப்பகுதியிலுள்ள ஒரு வீட்டில் வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் எதிர்பாராத விதமாக வெடித்ததில் இந்த சம்பவம் நடந்தது. அலுமினிய சுரங்கத்தில் பயன்படுத்துவதற்காக இந்த வெடி பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன.

ஜியான்ஷி மாகாணப்பகுதியில் உள்ள இரசாயன தொழிற்சாலையில் நிகழ்ந்த மற்றொரு வெடிவிபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவரை காணவில்லை. இந்த வெடி விபத்துகளால் அருகிலிருந்த கட்டடங்களும் சேதமடைந்தன. இருப்பினும் இரசாயன ஆலை விபத்தால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏதும் ஏற்பட்டதாக உடனடி தகவல் இல்லை என அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. (6-4)

உங்கள் கூடாரங்களை பிரித்துவைத்துக் கொள்ளுங்கள். இருதயங்களை ஒன்று சேருங்கள். – அரேபியா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தமிழ்க் கட்சிகள் ஒன்றுபடாவிட்டால் அனைவரும் ஓரங்கட்டப்படுவர்

யுத்தத்திற்குப் பின்பான அரசின் நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தாத தமிழர்கள் இருப்பாராயின் அவர்களை இனப் பற்றற்றவர்கள் என்றே கூறவேண்டும்.

அந்தளவிற்கு அரசின் ஒவ்வொரு அசைவும் அமைந்துள்ளது.

தமிழினம்– தமிழர் தாயகம் என்ற பேச்சுக்கு இடம் இல்லாத வகையில் அரசு முன்னெடுத்து வரும் திட்டங்கள் கண்டு அரசுடன் சேர்ந்திருக்கும் தமிழ் அரசியல் கட்சிகள் மௌனம் சாதிக்கின்றனவே தவிர வேறு எதுவும் செய்யமுடியாதவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.

அரசுடன் இணைந்துள்ள தமிழ்க் கட்சிகள் தமிழர் தாயகத்தில் இடம்பெறும் எந்தப் பிரச்சினையையும் சுட்டிக்காட்டும் பலமில்லாதவர்களாக வைக்கப்பட்டுள்ளனர்.

சுருங்கக் கூறின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் அரச ஆதரவு சார்ந்த தமிழ்க் கட்சிகள் செய்து முடித்தவற்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் செய்யமுடியவில்லை – செய்யவும் முடியாது. இதுவே யதார்த்தநிலை.

இதன் மறுபக்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் பேசுவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்?

நாடாளுமன்றத்தில் பேசுவதால் என்ன லாபம் என்று நினைக்குமளவில்தான் நாடாளுமன்றமும் இருக்கிறது.

ஆக ஒட்டுமொத்தத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சக்தியற்றவர்களாகி விட்டனர். இதற்கு அவர்களின் ஒற்றுமையீனமே காரணமாகும்.

நாடாளுமன்றத்தில் கூட, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழர்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதை மறந்து ஒருவரை ஒருவர் தாக்கிப்பேசி நேரத்தை வீணடிக்கின்றனர்.

இவர்களின் இந்த அறியாமை அரசின் திட்டத்திற்கு மேலும் உதவுவதாக அமைந்துள்ளது.


எனவே தனிப்பட்ட குரோதங்களை மறந்து தமிழினத்தின் தனித்துவம் பேண தமிழ்க் கட்சிகள்–தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓரணியில் திரள வேண்டும். இல்லையேல் மிக விரைவில் இவர்கள் அனைவரும் அரசினால் ஓரங்கட்டப்பட்டு ஏதுமற்றவர்களாக வருந்த வேண்டிவரும்.

ஆகவே தமிழ்க்கட்சிகளை ஒன்றுபடுத்துவதற்கான ஏற்பாடுகள் மறைமுகமாகவேனும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இல்லையேல் தமிழர்கள் பாவம் என்று கூறுவதைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியாது.

# பொன்சேகாவை பகிரங்கமாக சுட்டுக்கொல்ல வேண்டும்

## மேர்வின் சில்வா ஆவேசப் பேச்சு



(கொழும்பு)

சரத்பொன்சேகாவை பகிரங்கமாகச் சுட் டுக்கொல்ல வேண்டும் என தெரிவித்துள்ள நெடுஞ்சாலைகளின் பிரதியமைச்சர் மேர் வின் சில்வா சிங்கள மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இராஜத்துரோகிகளுக்கு இவ்வாறு தான் தண்டனை வழங்கப்பட்டதாகவும் கூறினார்.

மாத்தளை மாவட்ட அபிவிருத்தி ஒன்றிணைப்புக் குழுக்களின் கூட்டம் நேற்று முன் தினம் இடம்பெற்ற போது அங்கு திடீரென வருகை தந்து உரையாற்றுகையிலேயே மேர்வின் சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,

தேசத்துரோகியான சரத்பொன்சேகாவை பகிரங்கமாக சுட்டுக்கொல்ல வேண்டும். பிரித்தானிய அரசாங்கம் இலங்கை இராணு வம் தொடர்பாக விவாதம் ஒன்று நடத்த வேண்டும் என்று கோரியுள்ளது. இதற்குக் காரண கர்த்தா யார்? சரத் பொன்சேகா தான்.

நாட்டில் ஜனநாயகம் இருக்க வேண்டும் எமது நாட்டில் இருப்பது ஐந்து நட்சத்திர ஜனநாயகம். சரத்பொன்சேகாவை சுட்டுக் கொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அல வாங்கில் ஏற்றிக்கொல்லவேண்டும் என்று பகிரங்கமாகவே கூறுகிறேன்.

இராஜத்துரோகிகளுக்கு அளிக்கப்பட வேண்டிய தண்டனை தான் இது. சிங்கள மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் இவ்வாறு தான் மரணதண்டனைகள் வழங்கப்பட்டன.

காலை வாரி விடுவது ,சதிநாசம் செய்வது , நாட்டைக் காட்டிக்கொடுப்பது என்பது மிகவும் மோசமான துரோகம் ஆகும். இத்தகையோருக்கும் உரிய தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும். அப்போது தான் நாட்டை வெற்றிகரமாக அபிவிருத்திப்பாதையில் இட்டுச்செல்ல முடியும்.

நமது நாட்டை ஆட்சி செய்த வலகம்பாகு அரசன் உட்பட மகாபராக்கிரமபாகு அரசர்கள் உள்ளிட்ட பல சிங்கள அரசர்கள் இவ் வாறு உரிய தண்டனைகள் விதித்துத்தான் நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் சென்றமையை நினைவுபடுத்த விரும்புகி றேன் என்றார். (6-4)

# யுத்தத்தில் கைவிடப்பட்ட விவசாய வாகனங்களை கையளிக்க நடவடிக்கை

இறுதிக்கட்ட யுத்ததின் போது பொதுமக்களினால் கைவிடப்பட்ட விவசாயத்திற்குரிய வாகனங்களை உரிமையாளர்களிடம் கைய ளிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இணையத்தளமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த வாகனங்களை பொது இடத்தில் வைத்து அங்கிருந்தே பொதுமக்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக வன்னி மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் தீர்மானிக்கப்பட்ட தாகவும் இந்த நடவடிக்கையானது எதிர்வரும் ஒரு வாரத்துக்குள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் நாடாளும ன்ற உறுப்பினர் சிவ சக்தி ஆனந்தன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், இறுதிக்கட்ட யுத்தத்தின் போது முள்ளி வாய்க்கால் பகுதியில் பொதுமக்களினால் பெருமளவிலான விவசாயத்திற்குரிய வாகனங்கள் கைவிடப்பட்டுள்ளன.இந்நிலையில் மேற்படி விவசாயத்திற்குரிய வாகனங்களை உரியவர்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பில் மேற்படி கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இது தவிர இவ்வாறு முள்ளிவாய்க்கால் பகுதியில் பொது மக்களினால் கைவிடப்பட ஏனைய வாகனங்களையும் உரியவர்களிடம் கையளிப்பது தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடியதாகவும் அவர் தெரிவித்தார்.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய இணைப் புக் குழுவின் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (6-4)

## பரந்தன் விவசாய ஆராய்ச்சி நிலைய அடிக்கல் நாட்டு விழா

(கொழும்பு)

பரந்தனில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்திற் கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தித்துறை அமைச்சர் பசில் ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளார்.

மேற்படி நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு இடம் பெறவுள்ளது. ஜப்பான் அரசாங்கத்தின் நிதி உதவியுடன் ஜெக்கா திட்டத்தின் கீழ் மேற்படி விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கான புதிய கட்டிடம் பரந்தனில் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-4)

## தெங்கு உற்பத்தியாளர்களுக்கு கடன் வழங்கும் நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களி லுள்ள தெங்கு உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் கப்புறுக எனும் கடன் வழங்கும் நடவடிக்கை எடுக்கப்படு மென இலங்கை தென்னை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அன்டன் நிசாந்த பெர் னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் தெங்குப் பயிர்ச் செய்கைக்கான கப்புறுக எனும் கடன் திட்டம் வடக்கு மற்றும் கிழக்கு தவிர்ந்த இடங்களில் வழங்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் அப்பிரதேசங்களிலுள்ள தெங்குப் பயிர்ச்செய்கையாளர்கள் பயன் அடை கின்றனர்.

இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதிச் சூழ லில் கிழக்கு மாகாணத்தில் தெங்குப் பயிர்ச் செய்கை சங்கம் ஆரம் பிக்கப்பட்டுள்ளதெனவும் மிகவிரைவில் வடக்கிலும் தெங்குப்பயிர்ச் செய்கையாளர் சங்கத்தை ஆரம்பிக்கவுள்ளோம். இச் சங்கம் ஏழு மாவட்டங்களில் கிளை களை ஆரம்பித்துள்ளதென சங்கத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-4)

# பாபாவின் அருள் வரிகள்



மனிதனுக்கு அன்பும் இரக்கமும் தாராளமாகவே இருக்கின்றது. அதே வேளை மிருகக் குணமும் சரிபாதியாகவே இருக்கின்றது. இறைவனை கருணை, அன்பு, இரக்கம், மாயையின் வடிவம் அரக்கத்தனம் உணர்திறன் இல்லாத உயிரினத்துக்கு அசுர குணம் வரலாம். ஆனால் எல்லாவற்றையும் சிந்திக்கும் மனிதனுக்கு அக்குணம் தோன்றுவது அபத்தம். இருந்தும் மனிதனுக்கு நாசம் விளைவிப்பதான ஆணவமே உள்ளத்தில் உள்ளவரை அன்பு ,இரக்கம் துண்டறக் காண முடியாது. மனிதன் நினைப்பது வாழ்க்கையின் நிலைப்பு தன்வசமேயுண்டென்று இறைவனின் நினைப்பு இவனோ பாவமென்று.

மனிதனின் ஆணவமிடுக்கு! தன்னுடைய புத்தி சாரிதுரியமும் பலமும் தான் தன் வெற்றிக்கு காரணம் என எண்ணுகின்றான் இவையெல்லாம் வெற்றியின் சந்தோஷத்தில் தான். ஆனால் சந்தோஷத்துக்கு தோல்விகண்டு நிலை குலையும் காலம் இறைவா நீ தான் எமைக் காத்தருள வேண்டும் என்ற குரல் தொனிக்கிறது. காரணம் நமது மமதையை வீழ்த்தி தோல்வி காணும் வேளையே இறை சிந்தனை உதயமாகின்றது. இதுவும் சுயநலச் சிந்தனையே.

உண்மையிலேயே எமைப் படைத்து ஊண், உடை, உறையுள் உத்தம சந்ததி விருத்தி எல்லாம் இறைவனின் செயலே இதனை வாழ்வின் எல்லாக் காலமும் உணர்ந்து நடந்தால் இறைகருணை ஓங்கும் இல்லையேல் நம் நல் வாழ்வின் வளத்துக்கான இயற் கையே நம் வாழ்வின் முடிவுக்கா ரணமாகும்.


அன்பையும் இரக்கத்தையும் வெளிப்படுத்த வேண்டியவன் ஆணவமிடுக்கில் மார்தட்டி நான் என்று வாழ அவன் ஆயுள் குறைக்கப் படுகின்றது.

மரணத்தின் போதும் அவலத்தை எதிர்நோக்க நேரிடுகின்றது.

ஆணவம் பெருகி வழியும் காலம் பஞ்சபூதங்களும் பெருந்துயரைத்தர முனையும். பூமாதேவி எமைச் சுமப்பதற்குப் பதிலாக தன்னுள் சமைத்து விடுவாள். இதை நின்றொரு கணம் சிந்தித்து எம் உள்ளத்தில் இரக்கமும் அன்பும் உதயமாக இறை கருணை கிட்ட எல்லாம் ஸ்ரீசத்ய சாயி பாபாவின் பாதார விந்தையை பிறர்மேல் பழி கொள்ளும் பண்பற பற்றுவோமாக.

**ஜெய்சாயிராம் யாதவன்**

# கணனியைப் பாதுகாப்போம்




எல்லாம் ஆகாது என்றும் போலியான தன்னம்பிக்கையுடன் இந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்காமல் இருக்கின்றனர். இதற்குக் காரணம் நாம் அன்றாட வாழ்க்கையில் கணனிக்கென சற்று வியர்வை சிந்தி உழைக்க நாம் தயாராய் இல்லை என்பதே.

கணனியில் தான் இனி வாழ்க்கை என்று ஆகிவரும் இந்த நிலையில் அதனை அவ்வப்போது சரிசெய்து உள் அமைப்பையும் ட்யூன் செய்வது இன்றியமையாததாகிறது. இல்லையேல் என்றாவது ஒருநாள் திடீரென நின்று நம்மைத் திணறடித்துவிடும்.

பலமுறை இப்பகுதியில் எழுதப்பட்டது போல பைல்கள் பக் அப், அப்ளிகேஷன் சொப்ட்வேயர் அப்டேட்டிங், அண்ட்டி வைரஸ் புதுப்பித்தல், பயர்வோல் அமைத்தல் என்பவற்றை எல்லாம் நாம் இப்போது வழக்கமாக மேற்கொள்ள பழகிக் கொண்டோம். ஆனாலும் இன்னும் பலர் சற்று சோம்பேறித்தனமாகவும் நம் கணனி அது

இப்படிப்பட்டவர்களுக்காக சில டிப்ஸ்களை இங்கு காணலாம். நீங்கள் இன்னும் விண்டோஸ் எக்ஸ்பி பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்களா? அப்படியானால் இப்போது உள்ள விண்டோஸ் விஸ்டா மற்றும் விண்டோஸ் 7 தொகுப்புகளில் சிஸ்டமே மேற்கொள்ளும் சில விடயங்களை நாமாகத்தான் விண்டோஸ் எக்ஸ்பியில் மேற்கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டாக ஹார்ட் டிஸ்க்கினை டிபிராக் செய்வது விண்டோஸ் 7 சிஸ்டத்தில் தானாக மேற்கொள்ளப்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் விண்டோஸ் எக்ஸ்பியில் நாம் தான் இதனை மேற்கொள்ள வேண்டும். எந்த ட்ரைவினை டிபிராக் செய்திட வேண்டுமோ அதன் மீது ரைட் கிளிக் செய்து Properties Tools Defragment Now என்று சென்று டிபிராக் செய்திடலாம்.

இப்போது வரும் ஹார்ட் டிஸ்க்குகளின் கொள்ளளவு மிக அதிகமாக இருப்பதால் சிறிய ஹார்ட் டிஸ்க்குகளில் டிபிராக் செய்து கிடைக்கும் வசதிகள் பெரிய அளவில் இதில் கிடைப்பதில்லை. எனவே நீங்கள் புதியதாகக் கணனி வாங்கி இருந்தால் அதில் பெரிய அளவிலான கொள்ளளவில் ஹார்ட் டிஸ்க் இருந்தால் டிபிராக் குறித்து அவ்வளவாகக் கவலைப்பட வேண்டியதில்லை.

அடுத்ததாக நாம் கவனமாகச் செயல்பட வேண்டிய பிரிவு பைல்களை பக் அப் செய்திடும் பணி திடீரென நாம் அவ்வப்போது பணியாற்றும் பைல்கள் கிடைக்கவில்லை என்றால் என்னவாகும் என்று ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால் இவை எவ்வளவு முக்கியம் என்று உணர்வீர்கள். பக் அப் செய்திட எக்ஸ்டர்னல் ஹார்ட் ட்ரைவ் அல்லது ட்ரைவ் இமேஜஸ் என்று போவதைக் காட்டிலும் இணையத்தில் கிடைக்கும் ஸ்டோரேஜ் தளங்களைப் பார்வையிட்டு அவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து பக் அப் கொப்பிகளை வைத்துப் பாதுக்கலாம்.

போட்டோ பைல்களைச் சேமிக்க பேஸ்புக் அல்பம், ப்ளிக்கர், பிகாஸா, வெப்டொகுமெண்ட் பைல்கள் என்றால் நாம் அப்போது நம் சொந்த மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தும் டொகுமெண்டர்களுக்கு அன்றாடம் பக் அப் அவசியம். இவற்றின் அளவு ஜிபி அளவிலேயே இருக்கும். டெரா பைட் அளவிற்கு இருக்காது. எனவே இந்த பக் அப் வசதிக்கும் ஒன்லைன் ஸ்டோரேஜ் உகந்தது.

சிஸ்டத்தில் இயங்குகின்ற அப்ளிகேஷன் சொப்ட்வெயர் தொகுப்புக்களை அவ்வப் போது அப்டேட் செய்திடுவது இன்னொரு பாதுகாப்பான வழியாகும். சில தொகுப்பு கள் தாங்களாகவே அப்டேட் செய்து கொள்கின்றன. விண்டோஸ் சிஸ்டம் தானாகவே அப்டேட் செய்து கொள்ளும். பிரவுசர் ஒபீஸ் தொகுப்புகள் பிடிஎப் ரீடர் ஆகியவையும் அப்டேட் ஆகும் அல்லது நாம் தான் அவற்றை அப்டேட் செய்திட வேண்டும்.

இதனால் இவற்றிற்கு மால்வெயர் தொகுப்புகளிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும். ஆனால் பெரும்பாலும் நாம் பயன்படுத் தும் அனைத்தும் Automatically download and install என்ற வசதியைப் பெற்றிருக்கின்றன.

இந்த அப்ளிகேஷன்கள் அனைத்தும் அப்டேட் ஆகி உள்ளனவா என்றும் சோதிப்பது நல்லது. சில வாரங்களுக்கு முன் எழுதப்பட்ட filehippo என்ற பைலினை டவுண்லோட் செய்து இயக்கலாம். இதனை http:// www.filehippo.com/updatechecker/ என்ற தளத்திலிருந்து பெறலாம். இது ஒரு அப்டேட் செக்கர் பைல் அப்டேட் செய்யப்படாத அப்ளிகேஷன் சொப்ட்வெயர் தொகுப்புக்களைக் கண்டறிந்து அவற்றிற்கான தொடர்புகளை உங்களுக்குக் காட்டும்.

இவற்றில் எல்லாவற்றிலும் முக்கியமானது அண்ட்டி வைரஸ் சொப்ட்வெயர் தான். இதனை அவ்வப்போது அப்டேட் செய்வது மிக மிக முக்கியம். காலக் கெடு வரை காத்திராமல் அவ்வப்போது அப்டேட் செய்திடலாம்.

மேற்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் கணனி இயக்கங்கள் முடக்கப்படுகையில் சற்றும் பதட்டப்படாமல் நம் வழக்கமான பணிகளை மேற்கொள்ள முடியும் என்பது உறுதி.




# உங்களுக்கு தெரியுமா ?



◆ உங்கள் வங்கிக் கணக்கினைச் சரி செய்கிறோம். உங்கள் எக்கவுண்ட் எண் என்ன? இன்டர்நெட் பாக்கிங் யூசர் நேம் என்ன? இவற்றைச் சோதித்துக்கொள்ளுங்கள். இதற்கு இந்த லிங்கில் கிளிக் செய்து கொள்ளுங்கள் என்று எச்.எஸ்.பி.சி. அரச வங்கிகள் போன்ற வங்கிகளிடமிருந்து வருவது போல் இமெயில் வந்தால், உடனே அழித்து விடுங்கள். குப்பைத் தொட்டியிலும் வைக்காதீர்கள்.

ஏனென்றால், பெரிய வங்கிகள் இது போல் மெயில்களை அனுப்புவதில்லை. அவற்றின் பெயரில் மெயில் அனுப்பி, லிங்க் கொடுத்துப் பின், நாம் கிளிக் செய்கையில் ஏதேனும் ஒரு வைரஸ் புரோ கிராமினை இறக்கும் நாசகாரர்களின் முயற்சி இது. எனவே அவசரப்பட்டு இந்த மெயில்களில் உள்ள லிங்குகளில் கிளிக் செய்யாதீர்கள்.

◆ நான் நைஜீரியா நாட்டின் பெரிய பணக்காரர் மனைவி. என் கணவர் பல்லாயிரக்கணக்கான கோடி அமெரிக்க டொலர் பாங்கில்வைத்துவிட்டு இறந்துவிட்டார். இதனை எடுக்க யாராவது ஒருவரின் ஒத்துழைப்பு தேவை. நீங்கள் சம்மதித்தால், உங்கள் பாங்க் எக்கவுண்ட்டுக்கு பணத்தை மாற்றி, பின் எனக்குத் தாருங்கள். கொமிஷனாக 10% தருகிறேன் என்று இமெயில், போன் எண் எல்லாம் கொடுத்திருப்பார்கள்.

இதற்கு பதில் கடிதம் அனுப்பினாலோ, போன் செய்தாலோ, உங்கள் போன் எண்ணை முதலில் வாங்குவார்கள். இரக்கம் வரும் வகையில் பேசி, வங்கிக் கணக்கும் வாங்குவார்கள். பின் நாம் தான் மற்றவர்களிடம் பிச்சை எடுக்க வேண்டி வரும். நம் வங்கிப் பணத்தை எல்லாம் மாற்றிக் கொண்டு போய்விடுவார்கள்.

◆ இணையத்ததளங்களில் ஏதேனும் படிவத்தில் சிறு சிறு கட்டங்களில் அடிக்கடி தகவல்களை நிரப்ப வேண்டியதிருக்கும். இந்த பொக்ஸுகளுக்குள் பயணம் செய்திட மவுஸை எடுத்து கேர்சரை கொண்டு செல்லும் வேலையெல்லாம் வேண்டாம். ஜஸ்ட் டப் கீயைத் தட்டவும். பின் நோக்கிச் செல்ல வேண்டும் என்றால் ஷிப்ட் கீயுடன் டப் கீயைத் தட்டவும்.

◆ ஓர் இணையத்தளத்தில் காணப்படும் எழுத்து வகைகளின் அளவு சிறியதாக உள்ளதா? இதனைப் பெரிதாக்க கண்ட்ரோல் மற்றும் ப்ளஸ் கீகளை அழுத்தலாம். சிறியதாக மைனஸ் கீயை இணைக்கலாம். மேக் வகைக் கணனிகளில் இது வேகொ மாண்ட் கீயுடன் இணைந்து அழுத்தப்பட வேண்டும்.

இணையத்தளத்தின் முழு அளவினையும் பெரிதாக்க கொண்ட்ரோல் கீயை அழுத்திக் கொண்டு மவுஸின் ஸ்குரோல் வீலை நகர்த்தவும். முன்புறம் அழுத்த பெரிதாகவும் பின்புறம் அழுத்த சிறிதாகவும் மாறும். மேக் கணனிகளில் இது முழு திரையையும் பெரிதாக்கும்.

# ஸோன் அலார்ம் பயர்வோல்




(சென்றவாரத் தொடர்ச்சி) கெடுதல் புரோகிராம் இயங்கும் தன்மையை அறியும் வகை மேம்படுத்தப்பட் டுள்ளது. தானாகவே வை –பி இணைப்புக்கான பாதுகாப்பு தரப்படுகிறது.

பிஷ்ஷிங் புரோகிராம்களுக்கு எதிரான பாதுகாப்பு பலபடுத்தப்பட்டுள்ளது.

ஸோன் அலார்ம் டூல்பார் முற்றிலும் மாற்றப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. ஒன்லைனில் இது குறித்த தகவல்களை ஸ்டோர் செய்வதற்கு 2ஜிபி இடம் தரப்படுகிறது. இந்த புதிய பதிப்பினை ஐந்து நிமிடங்களில் இன்ஸ்டோல் செய்துவிடலாம். இன்ஸ்டோல் செய்தவுடன், இது செயல்படத் தொடங்க, கணனியை ரீபூட் செய்திடவேண்டும்.

இந்தப் புதிய பதிப்பில், கணனியிலிருந்து வெளிச் செல்வதனைத் தடுக்கும் வெளித் தடுப்பு (Outbound Firewall) பலமாக்கப் பட்டுள்ளது. உள் தடுப்பு சுவர் (Inbound Firewall) வெளியிலிருந்து வரும் வேண் டாத புரோகிராம்களைத் தடுக்கும். வெளித் தடுப்பு சுவர், கணனியிலிருந்து வெளியே செல்லும் வைரஸ் மற்றும் மால்வெயர் புரோகிராம்கள் தடுக்கின்றன.

இதனால், நம் தடுப்பு சுவர் மற்றும் அண்டி வைரஸ் புரோகிராம்களையும் ஏமாற்றிவிட்டு வரும் பாட்நெட் போன்ற வைரஸ்கள் நம் கணனியிலிருந்து மற்றவற்றிற்குச் செல் வது தடுக்கப்படுகிறது.

பதிய பதிப்பில் DefenseNet என்ற பாதுகாப்பு கவசம் மேம்படுத்தப்பட்டுள்ளது. யாரிடமிருந்து வருகிறது என்பதனை மறைத்து, வழக்கத்திற்கு மாறாகச் செயல்படும் புரோகிராம்களின் தன்மையை இந்தப் பாதுகாப்பு டூல் அறிந்து தடுக்கிறது. இந்தப் பதிப்பில் site check option என்ற ஒரு பட்டன் தரப்படுகிறது. இதன்மூலம் நாம் வழக்கமாகச் செல்லும் தளங்களைக் குறித்து வைத்து அவற்றை அனுமதிக்கலாம். ஓர் இணையத்தளம் பதிவான நாள், பழக்கப்படுத்தப்பட்ட நாள் இவற்றை எல்லாம் சோதனை செய்து, பின் அவற்றை நம் செட்டிங்ஸ் அடிப்படையில், சோதனை இன்றி, வழக்கமாக அனுமதிக்கிறது.

இந்த டூல் பாரில் இணைந்து அமைக்கப்பட்டுள்ள இமெயில் செக்கர் ஹொட்மெயில், ஜிமெயில், யாஹூ மற்றும் பிற பி.ஓ.பி.3 மெயில் எக்கவுண்ட்களுடன் இணைந்து செயலாற்றுகிறது.

ஆனால் ஐமேப் மெயில்களை சப்போர்ட் செய்திடவில்லை. இது ஏன் விலக்கப்பட்டுள்ளது என்று தெரியவில்லை.. ஐ ட்ரைவ் (IDrive) மூலம் இலவசமாக தவல்களைப் பதிந்துவைக்க 2ஜிபி இடம் ஒன்லைனில் தரப்படுவது இந்த பதிப்பு தரும் நல்ல அம்சமாகும்.

இதுவரை ஸோன் அலார்ம் பயர்வோல் பயன்படுத்தாதவர்களும், பயன்படுத்தி வருபவர்களும், இந்தப் புதிய பதிப்பினை டவுண்லோட் செய்து பயன்படுத்தத் தொடங்கலாம்.

புதியவர்களுக்கு, முதலில் சற்று சிரமமாக இருக்கலாம். பின்போகப் போகச் சரியாகிவிடும். நமக்கு நம் பாதுகாப்பு தானே முக்கியம்.

# வடகொரியாவிடம் போராடியது பிரேசில்; மைக்கானின் மாயாஜாலக் கோலால் வெற்றி

(ஜோகனஸ்பேர்க்)

சவால் விடுக்கும் வகையில் விளையாடிய வடகொரிய அணியை பிரேசில் அணி மைக்கானின் மாயாஜாலக் கோலால் வீழ்த்தியது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் 19ஆவது உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் ஜோகனஸ்பேர்க்கில் நடந்த ஜி பிரிவு லீக் போட்டியில் பலம் வாய்ந்த பிரேசில் அணி வடகொரியா அணியை சந்தித்தது.

**ஆரம்பத்தில் ஏமாற்றம்**

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பிரேசில் அணி, இரண்டாவது முறையாக உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்ற வடகொரியா அணியிடம் தடுமாறியது. போட்டியின் 21ஆவது நிமிடத்தில் கிடைத்த அருமையான வாய்ப்பை பிரேசில் வீரர் றொபின்ஹோ தவற விட்டார்.

அடுத்து 27ஆவது நிமிடத்தில் பிரேசில் அணிக்கும் 31ஆவது நிமிடத்தில் வடகொரியா அணிக்கும் கோனர்கிக் வாய்ப்புகள் கிடைத்தன. இரு அணிகளும் அதனை கோட்டை விட்டன.

இதனால் முதல்பாதி ஆட்டம் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காமல் நிறைவடைந்தது.

**சிறப்பான கோல்**

பிற்பாதி 55 ஆவது நிமிடத்தில் பிரேசில் தடுப்பாட்ட வீரர் மைக்கான் சிறப்பான கோல் அடித்தார். மைதானத்தின் வலது புறத்தில் 0 டிகிரியில் இருந்து மைக்கான் அடித்த கோல் பார்ப்பதற்கு அற்புதமாக இருந்தது.

பந்து 0 டிகிரியில் இருக்கும் போது கிராஸ் செய்வதுதான் வழக்கம். அவ்வாறுதான் நடக்கும் என எதிர்பார்த்த வடகொரியா கோல் காப்பாளர் மியோங் கோல் கம்பத்தை விட்டு சற்று முன்னால் சென்றார்.

இதனால் கோல் காப்பாளருக்கும் கோல் கம்பத்துக்கும் உள்ள இடைவெளியை கணித்த மெக்கான் அதனை தனக்கு சாதகமாக பயன்படுத்தினார்.

மைக்கானின் காலில் இருந்து விடுபட்ட பந்து மின்னல் வேகத்தில் அந்த இடவெளிக்குள் நுழைந்து கோலாக மாறியது.

மைக்கானின் மாயாஜாலக் கோலால் பிரேசில் அணிக்கு தெம்பு வந்தது. அடுத்து 71 ஆவது நிமிடத்தில் பிரேசில் அணியின் இளம் வீரர் எலானோ ஒரு கோல் அடித்தார். றொபின்கோ கொடுத்த பாஸ் எலானோ கோல் அடிக்க உதவியது.



இதன் மூலம் பிரேசில் அணி 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. ஆனால் பிரேசிலுக்கு சற்றும் சளைக்காமல் ஆடிய வடகொரியா ஆட்டத்தின் 89ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தது. ஜோங் டேசே கொடுத்த பாஸை பெற்ற யூன் நாம் ஜி, பிரேசில் கோல் காப்பாளர் ஜீலியோ சீசருக்கு அல்வா கொடுத்தார்.

கோல் காப்பாளருக்கு நேர் எதிர் நின்று யூன் நாம் அடித்த சிறப்பான கோல் இது. பிரேசில் அணிக்கு எதிராக கோல் அடித்ததே வட கொரிய அணிக்கு வெற்றி கிடைத்த மாதிரிதான்.

இறுதியில் பிரேசில் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று ஜி பிரிவில் 3 புள்ளிகளைப் பதிவு செய்தது. அடுத்து பிரேசில் அணி பலம் வாய்ந்த போர்த்துக்கல் ஐவரி கோஸ்ட் அணியை சந்திக்கவுள்ளது.

# கடைசி நேரத்தில் சமன் செய்து வரலாறு படைத்தது நியூசிலாந்து



(ரஸ்டன்பார்க்)

சுலோவேகியாவுக்கு எதிரான லீக் போட்டியில் கடைசி நேரத்தில் கோல் அடித்த நியூசிலாந்து அணி ஆட்டத்தை சமனிலை செய்து அசத்தியது.

தென்னாபிரிக்காவில் 19ஆவது உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடர் நடக்கிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ரஸ்டன் பார்க்கில் எப் பிரிவு, லீக் போட்டியில் தர வரிசையில் 34ஆவது இடத்தில் உள்ள சுலோ வேகியா அணி 78ஆவது இடத்தில் இருக்கும் நியூசிலாந்தை எதிர்கொண்டது.

சுலோவேகியா அணியினர் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இந்த அணியின் விட்டேக் (17ஆவது நிமிடம்), ஸ்டானிஸ் லவ் செஸ்டக் (28ஆவது நிமிடம்) இருவரும் கிடைத்த வாய்ப்பை வீணடித்தனர்.

நியூசிலாந்து தரப்பில் 37ஆவது நிமிடத்தில் கோல் அடிக்க கிடைத்தவாய்ப்பை ஸ்மெல்ட்ஜ் வீணடிக்க, முதல்பாதி ஆட்டம் கோல் எதுவும் இன்றி (0-0) சமனிலையில் முடிந்தது.

**முன்னிலை பெற்றது**

இரண்டாவது பாதியில் சுலோவேகியா அணியினர் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டனர். 50 ஆவது நிமிடத்தில் நல்ல வாய்ப்பு கிடைத்தது. நீண்ட தூரத்திலிருந்து செஸ்ட்வேக் கொடுத்த பாஸை பெற்ற விட்டேக் அதை தனது தலையால் முட்டி கோலாக மாற்றினார். இதனால் சுலோவேகியா 1-0 என முன்னிலை பெற்றது.

பின் நியூசிலாந்து அணியினர் கடுமையாக போராடினர். 88ஆவது நிமிடத்தில் கிடைத்த கோல் வாய்ப்பை நியூசிலாந்தின் ஸ்மெல்ட்ஜ் மீண்டும் வீணடித்தார்.

போட்டி முடிய 30 விநாடிகள் மீதமிருந்தது. திடீரென சுலோவேகியா தற்காப்புப் பகுதியில் புகுந்த நியூசிலாந்துவீரர் ஸ்மெல்ட்ஜ், பந்தை அருமையாக பாஸ் செய்து கொடுத்தார். இதை பெற்ற ரீட் தலையால் முட்டி சுப்பர் கோல் அடிக்க 1-1 என சமனிலையில் முடிந்தது.

**முதல் முறை**

இரண்டாவது முறையாக உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்கும் நியூசிலாந்து அணி, கடந்த முறை 3 லீக் போட்டியிலும் ஒரு கோல் கூட அடிக்க முடியாமல் தோற்று வெளியேறியது. நேற்றுமுன்தினம் தான் முதல் முறையாக கோல் அடித்தது. தவிர போட்டியை சமனிலை செய்து ஒரு புள்ளியும் பெற்றது.

# வோல்டர் சாமுவேலால் வம்பு நைஜீரியா அணிக்கு ஆர்ஜென்டீனா அடித்த கோலால் சர்ச்சை

நைஜீரிய அணிக்கு எதிராக ஆர்ஜென்டீனா அடித்த கோலை அனுமதித்திருக்கக் கூடாது என்று பீபா நடுவர் குழு கூறியுள்ளது.

உலகக்கோப்பை கால்பந்துத் தொடரில் கடந்த 12 ஆம் திகதி ஆர்ஜென்டீனா நைஜீரியாவுடன் மோதியது. இந்தப் போட்டியில் ஆர்ஜென்டீனாவின் கேப்ரியல் ஹென்ஸ் கோர்னர் கிக்கை தலையால் முட்டி கோல் அடித்தார். இந்தக் கோலால் இப்போது சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

வீரான் அடித்த அந்த கோர்னர்கிக், அந்தரத்தில் வந்த போது ஆர்ஜென்டீனா வீரர் வோல்டர் சாமுவேல் நைஜீரிய வீரர் ஓபாசியை பிடித்து கீழே தள்ளி உள்ளார்.

ஹென்சை நோக்கி ஓபாசி செல்லும் போது வோல்டர் சாமுவேல் இந்த முறையற்ற செயலை செய்ததாகவும் இதனால்தான், ஹென் சால் எந்தச் சிரமமும் இல்லாமல் கோல் அடிக்க முடிந்தது என்றும் சர்ச்சை ஏற்பட் டுள்ளது.

இதையடுத்து ஆர்ஜென்டீனா-நைஜீரிய அணிகளுக்கிடையேயான ஆட்டத்தின் வீடியோ பதிவை ஆராய்ந்த பிபா நடுவர் குழு ஆர்ஜென்டீனாவுக்கு இந்த கோலை வழங்கியிருக்கக் கூடாது என்று கூறியுள்ளது. இனிவரும் ஆட்டங்களில் இது போன்ற தவறுகளுக்கு இடங்கொடுக்ககூடாது என்று நடுவர்களும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கோர்னர்கிக், பிரீகிக் அடிக்கும்போது நடுவர்கள் கண்கொத்தி பாம்பாக இருக்கவேண்டும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.







# சுழலில் சுருண்டது பங்களாதேஷ் அணி; இந்திய அணி இலகுவான வெற்றி

(தம்புள்ள)

சுழல்பந்து வீச்சாளர்களின் உதவியுடன் இந்திய அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதும் ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கை தம்புள்ளவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடந்த இரண்டாவது போட்டியில் இந்திய-பங்களாதேஷ் அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி முன்னணி வீரர்கள் சோபிக்காத நிலையில் 34.5 ஓவர்களில் 167 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் இம்ரூல் ஹயில்ஸ் 35 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட)37 ஓட்டங்களையும் முஷ்பிகர் ரகீம் 55 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 30 ஓட்டங்களையும் மமுடுல்லா 23 ஓட்டங்களையும் தமீம் இக்பால் 22 , மொகமட் அஷ்ரபுல் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வீரேந்திர சேவாக் 2.5 ஓவர்களில் 6 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் நெகரா 2 விக் கெட்டுக்களையும், பிரவீன் குமார், ஹர்பஜன் சிங், ஜடேஜா, ரோகித் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு இலகுவான வெற்றி இலக் குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி காம்பீரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 30.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 168 ஓட்டங்களை குவித்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் கௌதம் காம்பீர் 101 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட)82 ஓட்டங்களையும் அணித்தலைவர் மகேந்திரசிங் தோனி ஆட்டமிழக்காமல் 45 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 38ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் மாஷ்ரங் மோர்டாஷா, சகிப் அல் ஹசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த கௌதம் காம்பீர் ஆட்ட நாயகனாக தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி ஒரு போனஸ் புள்ளியுடன் 5 புள்ளிகளைப் பதிவு செய்து தொடரில் முதலிடத்தைப் பிடித்தது.

பமிலி சுப்பர் ஸ்ரோர்ஸ்
சந்தை அருகாமை, மானிப்பாய்
T.P. 021 5100169
021 7900388
Baira
கோழி இறைச்சி
01 Kg 350/=
பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு ரூபா 350/= பெறுமதியான பைப் பை இலவசம்.
(சி-435)




# தேசிய ஒலிம்பிக் விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய ஒலிம்பிக் விழாவில் வீதியோட்டம், சைக்கிள் ஓட்டம் என்பவற்றில் பங்குபற்ற விண்ணப்பித்த பாடசாலைகள் மாணவர்களை அழைத்து வரும் பொறுப்பாசிரியர்களின் பெயர் விபரத்தை இன்று யாழ்.கல்வி வலய அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச)

# மீள்குடி...

ச்சர் மில்ரோய் பெர்னாண்டோ தலைமையிலான குழுவினர் இன்று காலை 8.30 மணிக்கு ஒஸ்மானியாக் கல்லூரிக்குச் சென்று அங்கு கலந்துரையாடவுள்ளனர்.

அதன் பின் முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வு தொடர்பிலும் ஆராயவுள்ளனர். (ச-5)

# இளைஞர்...

ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினரும் இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் தலைவருமான நாமல் ராஜபக்ஷ கலந்து கொள்கின்றார்.

அவர் கலந்து கொள்ளும் இந் நிகழ்வுக்கு சுமார் ஒரு இலட்சம் மாணவர்களை அணி திரட்டுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவர்களை அழைத்து வருவதற்கென சுமார் 20 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளன.

ஒரு இலட்சம் மாணவர்களின் வருகையை உறுதிப்படுத்தும் வகையில் அதிபர்களைச் செயற்படுமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (ச-5)

# தடுப்பு முகாம்களிலுள்ள இளைஞர்களை...

இரண்டு நாள் விஜயம் மேற்கொண்ட ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்தின் ஊடகவியலாளர் மாநாட்டினை மேற்கொண்டனர்.

அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறிய தாவது,

மீள்குடியேற்றம் செய்து விட்டதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் எமக்குக் கிடைத்த தரவுகளின்படி அநேகமான மக்கள் தற்போதும் கூடாரங்களில் அகதி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

யுத்தம் நிறைவடைந்து 13 மாதங்களாகியும் மக்களுக்கான உதவிகளை அரசாங்கம் முடியுமான வரை செய்யவில்லை. அவர்கள் வாழ்வாதார உதவியின்றி கஷ்டப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

13 மாதத்திற்கு மேலாகியும் இந்த அரசாங்கத்தினால் யுத்தத்தில் காணாமல் போனவர்கள், கைது செய்யப்பட்டவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்ற விபரங்களைப் பெற முடியாத நிலையில் இருக்கின்றது.

மீள்குடியேற்றப்பட்ட மக்கள் சாதாரண வாழ்க்கை வாழ்கின்றார்கள் என்பதை நாம் நம்புவதற்கு இல்லை. ஏ-9 வீதியின் இரு பக்கமும் மிகவும் மோசமாகவுள்ளது.

மக்களுக்கான தீர்வை வழங்குவதற்கு அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மக்களுக்கான தீர்வு வழங்குவதற்கு ஜே.வி.பியும் ஏனைய கட்சிகளும் போராட வேண்டும். அரசாங்கம் பொருளாதாரம், வாழ்வாதாரம் போன்றவற்றுக்குக் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும்.

நாம் சென்று மக்களைச் சந்தித்தபோது தண்ணீர் இல்லை எனத் தெரிவித்தனர். மீள்குடியேறிய மக்களுக்கான உதவிகள் வழங்குவது தொடர்பில் அரசாங்கம் பொய்யான தகவலை வழங்கி வருகின்றது என்றார்.

இதேவேளை இனப்பிரச்சினை தொடர்பாக ஜே.வி.பியின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது,

இலங்கையில் 48 ஆம் ஆண்டுக்கு முன்பும் அதன் பின்பும் இன்றைய ஆட்சியாளர்கள் வரை இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றை முன்வைக்கவில்லை.

மாறாக பிரச்சினையை வளர்த்துள்ளார்கள். 13-வது திருத்தச் சட்டம், 13பிளஸ் திருத்தச் சட்டமும் இந்தியாவினால் வற்புறுத்தப்பட்ட ஒரு திட்டமாகும்.

இவ்வாறான திட்டங்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வாக இருக்க முடியாது. தமக்கான தேவைகளை அடையாளம் கண்டு சமத்துவத்தின் அடிப்படையில் ஜனநாயகமாக எல்லாத்துறைகளிலும் சமத்துவம், சமமான உரிமைகளை வழங்குவதற்கான தீர்வை முன்வைப்பதே முதல் தேவையாகவுள்ளது.

சமத்துவத்தின் அடிப்படையில் உரிமைகள் வழங்கப்படாமையே பிரச்சினை உருவாவதற்குக் காரணம்.

ஜே.வி.பி. கடந்த காலம் சரி நிகழ்காலம் சரி ஏன் எதிர்காலத்திலும் கூட அடக்குபவர்களை எதிர்ப்புத் தெரிவித்தே வருகின்றது. ஆக எந்த நாடானாலும் சரி எந்த ஆட்சியாளர்கள் என்றாலும் சரி எமது நாட்டை ஆட்சியாளர்கள் ஒவ்வொரு பகுதியிலும் அடைவு வைத்துள்ளார்கள் என்றார். (ச-5)

# முல்லைத்தீவுக்குச் சென்ற பொஸ்கோ...

அவர்களுக்கான நிவாரண உணவு விநியோகம், அவர்களின் தொழில் முயற்சிகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டுள்ளார்.

அதன் பின்னர் வற்றாப்பளை கிராம சேவையாளர் பிரிவுக்குச் சென்ற அவர், அங்கு மீள்குடியமர்ந்துள்ள மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் நிலைமைகள், குறைகள், நிறைகள் என்பவற்றைக் கேட்டறிந்துள்ளார்.

ஐ.நாவின் உதவியோடு உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படுகின்ற நிவாரண விநியோகத்தையும் அவர் பார்வையிட்டுள்ளார்.

பின்னர் குமாரபுரம் பகுதிக்குச் சென்ற அவர் அங்கு இராணுவத்தினரும் எவ்.எஸ்.டி. என்ற சுவிஸ் நிறுவனத்தினரும் கண்ணிவெடி அகற்றும்பணிகளில் ஈடுபட்டிருப்பதைப் பார்வையிட்டு அவர்களுடன் உரையாடி நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

லியாம் பொஸ்கோவைச் சந்தித்தபோது மக்கள், தமக்குத் தொழில்வாய்ப்பு செய்து தரப்பட வேண்டும், நிரந்தர வீடுகள் அமைத்துத் தரப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முகாம்களிலிருந்ததிலும் பார்க்க தாங்கள் இங்கு சொந்தக் கிராமங்களில் சந்தோசமாக இருப்பதாகவும் தமக்கு ஏற்பட்டுள்ள பேரழிவுகளிலிருந்து தாங்கள் விரைவில் மீள எழ வேண்டும் என்ற ஆதங்கத்தையும் அவர்கள் ஐக்கிய நாடுகளின் அரசியல் விவகாரங்களுக்கான செயலரிடம் தெரிவித்துள்ளார்கள்.

பொதுமக்களின் நிலைமைகளைக் கேட்டறிந்த லியாம் பொஸ்கோ, இலங்கை ஜனாதிபதியுடன் பேச்சுக்கள் நடத்தி இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தையும் அழிந்த வாழ்க்கையையும் கட்டி எழுப்புவதற்கான உதவிகள் அரசாங்கத்தின் ஊடாகச் செய்யப்படும் என உறுதியளித்துள்ளார்.

அத்துடன் கஷ்ட நிலைமைகள் விரைவில் நீங்கி இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கையில் சுபீட்சம் ஏற்படும் என்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளைத் தாங்கள் உன்னிப்பாக அவதானித்துத் தேவையான உதவிகளைத் தாங்கள் வழங்கத் தயாராக இருப்பதாக லியாம் பொஸ்கோ தம்மைச் சந்தித்த பொது மக்களிடம் தெரிவித்துள்ளார். (ச-5)

# ஐ.நா. பிரதி...

பதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

லியாம் பொஸ்கோவுடன் ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நெயில் பூனேயும் இச் சந்திப்பில் கலந்து கொண்டார்.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் கடந்த வருடம் மே மாதம் இலங்கைக்கு வருகை தந்தபோது இரு தரப்பினராலும் இணக்கம் காணப்பட்ட விடயங்களை அமுல்படுத்துவது குறித்து இச் சந்திப்பில் உரையாடப்பட்டது.

பொஸ்கோ நேற்றுக் காலை வவுனியா அகதி முகாம்களுக்கு விஜயம் செய்திருந்தார். அவர் இம் முகாம்களின் நிலைமை குறித்தும் அரசின் மீள் குடியேற்ற முன்னேற்றம் குறித்தும் திருப்தி வெளியிட்டுள்ளார். (ச-5)

# தமிழ்க் கூட்டமைப்புடன்...

கட்சியின் ஏனைய உறுப்பினர்களுடன் இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் கூறினார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே யசூசி அகாசி மேற்கண்டவாறு கூறினார். தொடர்ந்து கருத்துக் கூறிய அவர்,

சர்வதேச அமைப்புக்கள் இலங்கை மீது எந்தவொரு அழுத்தத்தினையும் பிரயோகிக்கக் கூடாது என்றும் எடுத்துரைத்தார். இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளுக்காக யப்பான் அரசாங்கம் 39 பில்லியன் ஜென்களை நிதியுதவி செய்யவுள்ளது.

அத்துடன் வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை கண்டறிவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக் குழுவுக்கும் அகாசி தனது வரவேற்பினைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் பீரிஸும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அகாசி யாழ்ப்பாணத்துக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது யப்பானின் நிதியுதவியுடன் மீள்குடியேற்றம் குறித்த திட்டங்களின் முன்னேற்றங்களை நேரடியாகச் சென்று பார்வையிடுவார் என்றும் தெரிய வருகின்றது. (ச-5)

# ஐ.நா. செயலருக்கு வழங்கிய வாக்குறுதி...

பிரிட்டிஷ் நாடாளுமன்றில் புதிய அரசாங்கத்தின் இலங்கைக் கொள்கை தொடர்பான விவாதமொன்றில் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச விசாரணை தொடர்பில் போரின் இறுதிக்கட்டத்தில் என்ன நடைபெற்றது என்பதை விசாரிக்கும் முதல் கடமை இலங்கை அரசாங்கத்திற்குரியது என்று சர்வதேச சட்டம் கூறுகின்றது.

ஆனால் இது தொடர்பில் சர்வதேச சமூகம் இலங்கை மீது ஒரு விசாரணையைத் திணிக்க முடியாது.

மனித உரிமைகள், இலங்கையில் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பிலான உரிமைகள் மற்றும் போர்க் குற்றம் குறித்தும் செய்திகள் சேகரிக்கும் போதுமான விடயங்கள் குறித்தும் இலங்கை அரசு மீது தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றோம்.

இது தொடர்பில் இலங்கை அரசு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என என்ற எதிர்பார்ப்பு சர்வதேச சமூகத்திற்கு உண்டு. உதாரணமாக ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை குறித்து இலங்கை அரசு தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த நடவடிக்கை சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகளை எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கையை ஒரு வளமான, அமைதியான நாடாக உருவாகுவதையே நாம் விரும்புகின்றோம். போர்க் குற்றங்கள் தொடர்பில் அனைத்துத் தரப்பினருக்கும் எதிராகக் குற்றச்சாட்டுக்கள் உள்ளன என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் தொடர்பிலான நிலைப்பாட்டை இலங்கை அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார். (ச-9)

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

எமது பாடசாலை ஆசிரியை திருமதி கௌரி யோகேஸ்வரன் அவர்களின் அன்பு மாமன்
அமரர்
பொன்னுத்துரை துரைச்சாமி
(வாதரவத்தை, புத்தூர்)



அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு இன்று நடைபெறும் ஆத்ம ஈடேற்றப் பிரார்த்தனையில் நாமும் இணைந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/திருநெல்வேலி இ.த.க. பாடசாலை
(இ)

மக்லியோட் வைத்தியசாலை, இணுவில்
Mc Leod Hospital, Inuvil

முக்கிய அறிவித்தல்

யாழ்.போதனா வைத்தியசாலையில் நிபுணத்துவ வைத்திய சேவைபுரிந்து கொண்டிருக்கும் மகப்பேற்று வைத்திய நிபுணர் (V. O.G) Dr.S.ஜெயக்குமார், M.B.B.S., M.S. (Obstetrics and Gynaecology) அவர்கள் இணுவில் மக்லியோட் வைத்தியசாலைக்கு மகப்பேற்று வைத்திய நிபுணத்துவ சேவை வழங்குவதற்காக பிரதி புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு வருகை தந்து கொண்டிருக்கின்றார் என்பதை அறியத் தருகின்றேன்.

அநேக ஆண்டுகளாக வைத்திய சேவைகள் வழங்கிக் கொண்டிருக்கும் பழமை வாய்ந்த இணுவில் மக்லியோட் வைத்தியசாலை 1898 ம் ஆண்டு அமெரிக்க மிஷனரி வைத்திய நிபுணர்களால் ஸ்தாபிக்கப்பட்டது என்பதையும் நினைவூட்ட விரும்புகின்றேன்.

வைத்திய மேலதிகாரி,
Medical Superintenden

தொலைபேசி:
021 222 7669
077 6171451 ,077 2132517
(1695)

உடன் தேவை
● ஓவ்செற் மிசின் இயக்குபவர்கள் (ஆண்கள்)
● ஓவ்செற் மிசின் பயிலுநர்கள் (ஆண்கள்)
பிற்பகல் 3 மணிக்கு நேரில் வரவும்
வலம்புரி
இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

இலங்கை, இந்திய ஒரே தின வெளியீடு
விக்ரம், ஐஸ்வர்யாராய், அபிஷேக்பச்சன் மற்றும் பலர் நடிப்பில்
இன்று முதல்



ராவண்
இசை:- ஏர்.ஆர்.ரஹ்மான்
செல்லா சினிமா
(நாதன்ஸ்) யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00
(C-438)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.